நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



தமிழுண்ட கருங்கடலோ தனித்திருமால் பாற்கடலோ
அமுதூறும் தமிழ்க்கடலோ அருட்காந்தி திருத்தவமோ
இந்தியத்தாய் பெருவாழ்வோ எனச்சான்றோர் பாராட்ட
வந்ததமிழ்ச் சொக்கலிங்கர் மலர்ப்பாதம் மணம்போற்றி

செப்டம்பர் 1992

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் : 18-5-1926

மறைவு : 7-9-1990

திரு. இராம. முத்தழகப்ப செட்டியார்

கோனாபட்டு

நகரத்தார் மரபுக்குத் திலகம் ஆனாய் !
நாகப்பா கைக்கிள் மார்ட் வளர வாழ்ந்தாய்
அகமுயர்ந்த சான்றோரால் மதிக்கப் பெற்றாய் !
அறப்பணியும் திருப்பணியும் அமையச் செய்தாய் !
சிகரமெனும் புகழ்க்குன்றில் ஏறும் போது
சிறப்புடைமுத் தழகப்ப ! தெய்வ மானாய் !
தகவுடைய மணியோடும் ஒலியாய்ச் சேர்ந்தாய் !
தமிழன்ப ! உன்நினைவு தழைத்து வாழ்க !

என்றும் நினைவு கூரும் :

Dr. M. பழநியப்பன், M. B. B. S.

மற்றும் தொழிலாளர்கள்

நாகப்பா சைக்கிள் மார்ட்,
மதுரை, திருவாரூர், கும்பகோணம், சென்னை.

நாகப்பா மோட்டார்ஸ்.
மதுரை & சென்னை

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 11
ஒலி 8

ஆங்கிரஸ
ஆவணி

செப்டம்பர்
1992

என்பே விறகாய் இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போல் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே

— திருமூலர் திருமந்திரம்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம் :
20, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு,
மதுரை-625 009

தொலைபேசி p. p. 32084

ஆண்டுச் சந்தா ரூ. 30-00 டெபாசிட் சந்தா ரூ. 300-00



கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை



ஆடிட்டர் சித. அண்ணுமலை செட்டியார்

''1947ல் நாட்டரசன்கோட்டையில் கம்பன் கல்விக் கழகத்தார் நடத்திய ஒரு விழாவில் நான் இனிமையாகத் தேவாரம் பாடினேன். அதைக் கேட்டு மகிழ்ந்த அவ்வூர் செல்வர் சுப. ராம. லெ. இராமகிருஷ்ணன் செட்டியார் அவர்கள் பின்னுளில் (1951ல்) தம்முடைய ஒரே மகள் தெய்வானையை எனக்கு மணம் செய்து வைத்தார்'' என்கிருர், சேலத்தில் ஆடிட்டராகப் பணியாற்றிவரும் ஒக்கூரைச் சேர்ந்த திரு. சித. அண்ணுமலைச் செட்டியார். (இவர் பள்ளி, கல்லூரி நாட்களில் திருமுறை இசைப் போட்டி, பாரதியார் பாடல்கள் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு பரிசுகள் பல பெற்றிருக்கிருர்.)

ஒக்கூரில் 'தர்மகர்த்தா வீடு' என்ருல் பிரபலம். அந்த வீட்டில் பிறந்தவர் நம் ஆடிட்டர். இவரது ஐயா சி கரு. சி. சித. சிந்தாமணி செட்டியார் அவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலில் 1926 ஆம் ஆண்டு சுமார் ஆறரை இலட்சம் ரூபாய் செலவில் பல திருப்பணிகளைச் செய்தும் நந்தவனம் அமைத்தும் ஆன்மீகத் தொண்டாற்றியவர்கள். அப்போது அரசால் ஆண்டாள் நாச்சியார் கோவிலுக்கு பரம்பரைத் தர்மகர்த்தாவாக நியமிக்கப்பட்டு 1932 ஆம் ஆண்டுவரை அவர்கள் இறைத் தொண்டு ஆற்றினுர்கள்.

புதல்வன் தெற்கே தர்மம் செய்ய அவரது தந்தையார் ஒக்கூர் சி. கரு. சி. சிதம்பரம் செட்டியார் அவர்கள் தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் சென்று அங்கு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் தேவாரப் பாடசாலை கட்டியும் நந்தவனம் அமைத்தும் இறைத் தொண்டு ஆற்றினுர்கள். (1975 வரை நந்தவனப் பணி நடந்து வந்தது) இவர்கள் குடும்பத்தார் ஒக்கூரை அடுத்துள்ள சோழபுரம் சிவன் கோவிலுக்கும் தொடக்க காலத் திருப்பணிக்கு கால் பங்கு நிதி உதவி செய்திருக்கிருர்கள்.



திரு. சித. அண்ணுமலை செட்டியார் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் B.Com, படித்துத் தேர்ச்சி பெற்று (1955ல்) மதுரையில் உள்ள ஆடிட்டர் பெரி. தியாகராஜன் அவர்களிடம் பயிற்சி பெற்று 1958ல் C. A. தேர்ச்சி பெற்று 1959 முதல் சேலத்தில் ஆடிட்டராகப் பணியாற்றி வருகிருர்.

திரு. சித. அண்ணுமலைச் செட்டியார் சேலம் ஓம் ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமத்தில் 1987 முதல் செயலாளராகவும் சேலம் ஸ்ரீ ராஜகணபதி கோவில் நகரத்தார் சப்தாரண உற்சவக் குழுத் தலைவ

நம்மவர் உதிர்த்த நன் முத்துக்கள் !

நாம் ஆண்டுதோறும் காவிரிப்பூம்பட்டினம் வந்து நம் மூதாதையர்களை நினைக்கின்ற மரபினைப் பதிவுசெய்து கொள்ளுதல் மிக மிக அவசியமாகும்.

பண்டுதொண்டு செய்தவர்கள் போல நாம் வாழும் நூற்றுண்டிலும் செய்பவர்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது. காசிக்கு வழி நடைப் பயணம் சென்று தொண்டாற்றி வரும் அரு. சோ. வைப் பெற்றிருப்பது நம்மினத்திற்குப் பெருமையாகும்.

— முனைவர் ச. மெய்யப்பன்

லட்டு என்ருல் திருப்பதி நினைவு வரும்; பஞ்சாமிர்தம் என்ருல் பழநி நினைவு வரும்; தீர்த்தம் என்ருல் இராமேஸ்வரம் நினைவு வரும். அதுபோல் காவிரிப்பூம் பட்டினம் என்ருல் அரு. சோ.வின் கூற்றுப்படி சங்கமுகமும் சட்டி பானையும் நினைவில் வரவேண்டும்.

ஆடையினை மனைவி கையால் எடுத்துத்தரச் சொல்லி அதனை வாங்கி தாயார் முன்னிலையில் உடுத்திட வந்தார், பட்டினத்தார். ஒரு முறைக்கு இரு முறை பார்த்த தாயார் பட்டினத்தாரை நோக்கி 'முற்றும் துறந்த முனிவருக்கு முழு ஆடை தேவை இல்லையே'' என்ருர்.

தாயும் தந்தையும் இல்லாத பிறவாயாக்கைப் பெரியோனுகிய சிவபெருமானுக்கு தாயாக, தனையனுக வந்தவர்கள் நம்மவர்கள் தான். காரைக்கால் அம்மையாரை ''அம்மையே'' என்று அழைத்தார். மருதவாணனுக வந்து பட்டினத்தாரை ''அப்பா'' என்று அழைத்தார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவில் 8-8-92 அன்று நடைபெற்ற பேரவை நிகழ்ச்சியில் பேசியவை)

ராகவும் சேலம் ஸ்ரீ சுகனேஸ்வரர் திருக்கோவில் திருவெம்பாவைக் கழகத் தலைவராகவும் எட்டு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் ஆடி வெள்ளிக் கிழமை திருவிளக்கு வழிபாட்டு அமைப்பின் அமைப்பாளராகவும் இருந்து முன்னோர்களின் வழியில் இறைத் தொண்டாற்றி வருகிருர்.

''தாய், தந்தையைத் தெய்வமாக வழிபட வேண்டும்; தெய்வ நம்பிக்கையோடு, நல்லெண்ணங்களோடு வாழ வேண்டும்; அடுத்தவருக்கு நன்மை ஏற்பட்டால் அதைப் போற்றி மகிழ வேண்டும்,'' என, இவர் இளைஞர்களுக்குச் சொல்லுகிருர்.

அன்பிற்கும் அடக்கத்திற்கும் உரியவரான திரு. சித. அண்ணமலை செட்டியாருக்கு இரண்டு ஆண்மக்களும் மூன்று பெண்மக்களும் பேரன் பேத்திகளும் உள்ளனர்.

திருப்பரங்குன்றத்திற்கு பால்குடம், காவடி

மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் பத்தாவது ஆண்டாக, ஆவணிக் கார்த்திகையை முன்னிட்டு 20-8-92 அன்று வடக்குமாசி வீதி தருமபுர ஆதீன சொக்கநாதர் திருமண மண்டபத்தில் காவடிகள் கட்டப் பெற்றன. பாகனேரி திரு. வே. மாணிக்கம் செட்டியார் விநாயகப்பானை வைத்தார்கள். தொழிலதிபர் செம்பனூர் திரு. கும. நா. சுப. நா. இராமசாமிச் செட்டியார் வேலுக்கு அபிஷேகம் செய்தார்கள். தேவகோட்டை திரு. வெ. நா. மு. ராம. இராமநாதன் செட்டியார் அன்று இரவு அனைவருக்கும் விருந்தளித்தார்கள். மறுநாள் 21-8-92 அன்று காலை 8-30 மணிக்கு 27 பால் குடங்கள் கட்டப் பெற்றுப் பாதயாத்திரையாகச் சென்று திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆண்டவர் சன்னதியில் காவடி, பால்குடங்கள் செலுத்தப் பெற்றன. திரு. ஆர்எம். என். கோவிந்தன் செட்டியார் வேல் எடுத்துச் சென்றார். பின்னர் திருப்பரங்குன்றம் நகர விடுதியில் நடந்த மஹேஸ்வர பூஜையில் சுமார் ஆயிரம் பேருக்கு அன்ன தானம் வழங்கப் பெற்றது. பின்னர் அங்கு 21 மங்கலப் பொருட்கள் டாக்டர் திரு எஸ். சண்முகம் செட்டியார், திரு. வே. மாணிக்கம் செட்டியார் ஆகியோர் முன்னிலையில் திரு. கு. வெ. கு வெங்கடாசலம் செட்டியாரால் ஏலம் விடப் பெற்றன. நகரத்தார் பெருமக்களும், ஆச்சிமார்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

காவடி அமைப்பாளர் திரு. லெ. மு. மூ. முத்துமாணிக்கம் செட்டியார் உறுதுணையாக இருந்து சிறப்பாக நடத்தி வைத்தார்.

குல தெய்வ கூட்டு வழிபாடு

தேவகோட்டை இலுப்பைக்குடிக் கோவிலைச் சேர்ந்த ஐந்து வீட்டுப் பங்காளிகள் சுமார் 80 பேர் 23-8-92 அன்று தேவகோட்டைச் சிவன் கோவிலிலிருந்து புறப்பட்டு இறகு சேரி, அரியக்குடி, இலங்குடி, இலுப்பைக்குடி ஆகிய ஊர்களுக்குச் சென்று குல தெய்வ கூட்டு வழிபாடு செய்து திரும்பினர்.

இலுப்பைக்குடியில் 'பொற்கிழிக் கவிஞர்' திரு. அரு. சோ. ''நகரத்தார் நாயன்மார்கள்'' என்ற தலைப்பில் ஆன்மீகப் பேருரை ஆற்றினர்.

இந்த வழிபாட்டுப் பயணத்தை ஐந்து வீட்டாரின் சார்பாக அமைப்பாளர்கள் திரு. எஸ்பி. எஸ். மெய்யப்ப செட்டியார், திரு. கி. கரு. ராம. கரு. பழனியப்பன், திரு. கா. சோமையா, திரு. ஆர்எம். வீரப்பன், கவிஞர் திரு. சேது அருணசலம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

ஃ ஆத்தங்குடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் குட நீராட்டு விழா 2-9-92 காலை சிறப்பாக நடைபெற்றது. 30-8-92 முதல் 2-9-92 காலை வரை ஆறுகாலம் யாகசாலைப் பூஜைகள் நடைபெற்றன.

முனைவர் கேஎன். கே. எஸ். கே. சோக்கலிங்கம்

முனைவர் திரு. கேஎன். கே. எஸ். கே. சொக்கலிங்கம் கோட்டையூரில் சு பழ. சித. அழகப்ப செட்டியாரின் ஆறு புதல்வர்களுள் மூன்றுமவராகப் பிறந்து நாட்டரசன்கோட்டைக்கு கண. க. சொ. கோவிந்தநாராயணன் செட்டியாருக்கு சுவீகாரம் சென்றவர். இவர் இளையாத்தக்குடி கோவில் கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர். இவரை குடும்பத்தினர் 'லெட்சுமணன்' என்று அழைப்பர். 49 வயது இளைஞரான இவர் அமைதியான பேச்சும், அடக்கமான குணமும் கொண்டவர்.

இவர் நாட்டரசன்கோட்டை ச. ராம. உயர்நிலைப் பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தார். பள்ளி இறுதி வகுப்பில் பள்ளி மாணவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறு வயதிலேயே இலக்கியக் கூட்டங்கள் பலவற்றுக்கு ஏற்பாடுகள் செய்து தமிழ் வளர்ச்சிக்குப் பணி புரிந்தார். பள்ளி இறுதி வகுப்பில் பள்ளியிலேயே முதல் மாணவராகத் தேறி, வெள்ளிப் பதக்கமும் பெற்றார். பின் மதுரை தியாகராசர் கல்லூரியில் புகுமுக வகுப்புக் கல்வியையும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி இ. (மெக்கானிக்கல்) மற்றும் எம் எஸ்ஸி. (இன்ஜினீயரிங்) பட்டப் படிப்பும் படித்தார். இவர் புகுமுக வகுப்புப் படிக்கும்போதே இவர் அம்மான் கீழப்பூங்குடி திரு. கூ. அரு. க. வயி. சொ. சொக்கலிங்கம் செட்டியார் தன் மூத்த பெண்ணை இவருக்குத் திருமணம் செய்து வைத்தார். இருப்பினும் இவர் கல்வியில் சிறிதும் நாட்டம் குறையாமல் படித்து பி. இ. யில் முதல்வகுப்பிலும் எம் எஸ்ஸி. யில் முதல் மாணவராகவும் தேறினார். படிக்கும்போதே கல்லூரியில் பல்வேறு பதவிகள் வகித்து மாணவர்களுக்கு நற்பணிகளை ஆற்றியுள்ளார்.

காரைக்குடி அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரியில் இணை விரிவுரையாளராக பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தார். சென்னை அண்ணா பல்கலைக்



கழகம், கிண்டி பொறியியல் கல்லூரியில் விரிவுரையாளராகவும் மூன்றுண்டுக்காலம் பணிபுரிந்தார்

சென்னை இந்திய தொழில் நுட்பக் கழகத்தில் உலோக வடிவமைப்பு முறையில் (Sheet Metal Forming) பட்ட ஆராய்ச்சி மேல் படிப்பை பேராசிரியர் முனைவர் திரு. கே. ஏ. பத்மனாபன் மேற்பார்வையில் மேற்கொண்டு ஆராய்ச்சிகள் செய்து குறிப்பிட்ட கால அளவான மூன்றாண்டுக் காலத்தில் (1985ல்) பி. எச்டி. பட்டம் பெற்றார். இவர் செய்த

ஆராய்ச்சியின் முடிவுகளை இலண்டனிலிருந்து வெளிவரும் 'Journal of Materials Science' என்ற இதழ் வெளியிட்டுள்ளது. இவ்விதழின் ஆசிரியர், ''இப்புதுமையான ஆராய்ச்சிக்கு எனது பாராட்டுக்கள்'' என்று இவருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதியுள்ளார். இவர் செய்துள்ள ஆராய்ச்சியின் பயனாக, சுலபமாக வடிவமைக்க முடியாத டைட்டேனியம் போன்ற உலோகத் தகடுகளை வேண்டிய வடிவில் வடிவமைப்பது சுலபமாக்கப்பட்டுள்ளது. இத்தகைய முறைகள் இந்திய விமானக் கம்பெனிகளுக்கும் இந்தியப் பாதுகாப்பு தொழிற்சாலைகளுக்கும் மிகவும் பயன்படக் கூடியதாக இருக்கும். பொறியியலில் முனைவர் பட்டம் பெற்றவர்கள் நம்மினத்தில் ஒரு சிலரே உள்ளனர். அவர்களில் இவரும் ஒருவர்.

பி. இ. பட்டப் படிப்புக்குத் தேவையான உலோகப் பொறியியல் (Metallurgical Engineering) என்ற புத்தகத்தை இவர் தமிழில் எழுதி தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் மூலம் வெளியிட்டுள்ளார். இந்நூலில் கலைச்சொல் அகராதியும் விளக்கப் படங்களும் உள்ளன. ''இந்நூல் ஆங்கில நூலுக்கு இணையாக எழுதப்பட்டுள்ளது'' என அறிஞர்கள் பலர் பாராட்டியுள்ளனர்.

தற்சமயம் திருநெல்வேலி அரசினர் பொறியியல் கல்லூரியில் கணிப்பான் அறிவியல் துறையின் தலைவராக இவர் பணிபுரிந்து வருகிறார்.

இவர் பிறந்த வீட்டிலுள்ளவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் சுவீகாரம் சென்ற வீட்டிலும் உற்றார் உறவினர் மற்ற எல்லோருடனும் அன்புடனும், பணிவுடனும் நடந்து அனைவரின் நன்மதிப்பையும் பெற்றுள்ளார்.

இவர் தன் முன்னேற்றத்திற்கு தனது குடும்பத்தவரே காரணம் என்று பெருமையுடன் கூறிகிறார். ஒரு மகனுக்கும் ஒரு மகளுக்கும் திருமணம் செய்து முடித்து விட்டார். மூத்த மகன் சி. சிவசுப்பிரமணியன் திருநெல்வேலி டவுனில் தொழில் செய்து வருகிறார். இரண்டாவது மகன் கோவில்பட்டி பொறியியற் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படித்து வருகிறார் இவர் திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அதற்காக திருநெல்வேலி நகரத்தார் சங்கத்தினர் இவருக்குப் பாராட்டு விழா நடத்தினர்.

அமராவதிபுதூரில் குடமுழுக்கு விழா

காரைக்குடி அருகில் அமராவதிபுதூரில் அமைந்துள்ள அருள்மிகு பால கணபதி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் குடநீராட்டு விழா 3-9-92 காலை சிறப்பாக நடைபெற்றது. 31-8-92 முதல் 3-9-92 வரை ஆறு காலம் யாகசாலைப் பூஜைகளும் அதனையொட்டி கலை, இலக்கிய நிகழ்ச்சிகளும் நடை பெற்றன.

"மூலத்ததாகி வரும் முறைமை"

பேரின்பமே ஆண்டவன் வழி. அவன் ஆட்சி இவ்வுடலில் கண்டு உணர்ந்து கொள்வதற்கு மெய் குருவின் தீட்சையும் பூரண ஆசியும் வேண்டும். இம்மாதிரி ஓர் குருவின் திருவருள் கிடைத்தால் வாழ்க்கை வெற்றியாகும்.

அதுவே ஆண்டவன் தரிசனம். அம்மாதிரியான காட்சிகளைக் கண்டவன் படிப்படியாக தெய்வத்தன்மையை அடைந்து கொண்டு வருகிறான். அதன் பிறகு புறவுலக நிகழ்ச்சிகள், இகழ், புகழ், வெற்றி, தோல்வி, விருப்பு, வெருப்பு, கஷ்டம், நஷ்டம், முன்னேற்றம் போன்ற எதுவுமே அவனை அணுக முடியாது. அவன் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டவன். மெய் மூலமாகிய அறிவு ஒளியிலே ஆணிவேர் ஊன்றியவன். அவன் எக்காரணம் கொண்டும் புறஉலகிற்கு ஆளாகமாட்டான்.

எந்தவிதமான சித்திகள் சக்திகள் வந்தாலும் 'எல்லாம் அவன் செயல்' என்று எண்ணுகிறான். குருவும் இறைவனும் வேறல்ல; மும்மூர்த்திகளும் குருவும் ஒன்றே.

மகான்களின் அருளால் தீராதது ஒன்றுமில்லை. இவை யாவும் மனிதப் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்டது. ஆனால் அவர்களைக்கேட்டால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றே சொல்வார்கள்.

வேதங்களில் மனித வாழ்க்கையின் அடிப்படை என்ன என்பது மட்டுமல்லாமல் உலகத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளின் அடிப்படையான உண்மை என்ன என்பது மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அனைத்துப் பொருள்களும் தத்தம் இயற்கை குணத்தை நோக்கியே சஞ்சரிக்கின்றன. நதி கடலை நோக்கிப் பாய்கிறது. மனிதன் தனது வாழ்க்கையில் தன் இயற்கை குணமாகிய பரம்பொருளை நோக்கிச் செல்கிறான் என்பது ஒரு கேள்விக் குறியே. பால், பாலாக இருந்துவிட்டால் அதன் ஆற்றலை வெளிக் கொண்டு வர முடியாது. முறையாக அதற்குச் செய்ய வேண்டிய காரியங்களைச் செய்தால்தான் தயிர், மோர், வெண்ணை, நெய் என்று பலவற்றைப் பெற முடியும். கடைசியாகக் கிடைக்கின்ற நெய்கூடப் பால்தானே தவிர வேறில்லை. பாலாகவே இருந்து விட்டால் அது விரைவில் கெட்டுவிடும், அதைப்போல பாலிலிருந்து நெய்யை முதலில் எடுப்பது முடியாதது. அதற்கென்று ஒரு வழிமுறை இருக்கிறது. படிப்படியாகத்தான் நெய் என்ற சுத்தமான பொருளைப் பெற முடியும்.

அடிப்படை உண்மையை வைத்துப் பார்க்கும்போது நாம் எல்லோரும் அந்தப் பரம்பொருளின் திருவுருவமே. அதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வழிமுறை—சம்பிரதாயம் இருக்கிறது. அதைக் கடைப்பிடித்தால் நமது இயற்கையான இயல்பை உணர முடியும்.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை எதையோ தேடி

அலைகிறான். அது என்ன என்று கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் சொல்வார்கள். வேலை, ஊதிய உயர்வு, சொந்த வீடு, வாகனங்கள், குழந்தைகளின் நலம் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகும். ஆனால் எதற்காக இவற்றை எல்லாம் விரும்புகிறான் என்று கேட்டால் அவனுல் தெளிவான ஒரு பதிலைக் கூறஇயலாவிட்டாலும், தனக்கு அதனால் அமைதி கிட்டும் என்ற நம்பிக்கையே அதற்குக் காரணம். ஆனால் அவன் தேடும் பொருள் கிடைத்தாலும் அவனால் அவன் நினைத்தபடி அமைதியாக இருக்க முடியவில்லை. இது புரியும்போது எதிலிருந்து நிரந்தரமான அமைதியைப் பெறமுடியும் என்று சிந்திக்கிறான்.

அனைத்து சமயங்கள் விதிக்கின்ற சம்பிரதாயங்களும் ஒருவனை அவனது மிருகத்தன்மையிலிருந்து விடுவித்து, தெய்வத் தன்மையை அடையச் செய்கின்றது கோவில்களுக்குச் சென்று வழிபாடுகள் செய்கின்ற சம்பிரதாயம் முதல் காட்டில் தவம் செய்து கடவுளை அடையும் புனித காரியம் வரை அனைத்துமே படிப்படியாக மனிதனைப் பக்குவப்படுத்துவதற்காகவே.

ஒருவன் அவனது பக்குவத்தின் அடிப்படையில்தான் தனது சமய வழிபாட்டு முறைகளைக் கடைபிடிக்க முடியும். பக்குவமான ஒருவன் தியானத்தில் மனம் இயல்பாக நாட்டம் கொள்வதாக உணர்ந்தால் தியானத்தில்தான் தனது முழு கவனத்தைச் செலுத்த வேண்டும். அதனால் ரோகவில் வழிபாடுகள், பூஜைகள், மற்ற சடங்குகள் கூடாது என்று சொல்லக்கூடாது.

மனதிற்குப் பல முகங்கள் உள்ளன. அதனால், அதை ஒருமுகப்படுத்துவதற்கு சான்றோர்கள் நமக்கு பல வழிகளை அளித்துள்ளனர். பாகவதத்தில் பிரகலாதன் பக்தியை எப்படி அடைவது என்று புரியும்படி அருளியுள்ளார். அதில் ஒன்பது மார்க்கங்களைக் கூறியுள்ளார். கடவுள் மகிமையைக் கேட்டல் (சிரவணம்) கடவுளைப் பற்றிப் பாடுதல (கீர்தனம்) எப்போதும் நினைவில் வைத்துக்கொளல் (ஸ்மரணம்) பாதங்களுக்குச் சேவை செய்தல் என்று மட்டும் அல்லாது அர்ச்சனை செய்தல் என்று எளிமையான வழிகள் பல அருளியுள்ளார்.

இவைகள் அனைத்துமே மனிதன் கடைப்பிடிக்கக்கூடிய எளிமையான மார்க்கங்களே ! இவற்றைக் கடைப்பிடிப்பதால் நமது சுயநலத்தைத் துறந்து நாம் கடவுள் தன்மையை அடைய முடியும்.

ஆனால் நாம் இவற்றை மறந்து, நம் மனதின் போக்கில் சுயநலத்தின் அடிப்படையில் வெறும் யாசகனைப்போல் பலனை மட்டும் எதிர்பார்த்து பிரார்த்தனைகளும் பூஜைகளும் செய்கிறோம் இவை ஒருக்காலும் நாம் அடையவேண்டிய உயர் நிலையை அடையச் செய்யாது. அதனால் சான்றோர்கள் கூறியுள்ள அடிப்படையான விதிமுறைகளை மனதார ஏற்றுக்கொண்டு உயர்நிலையை அடைய எம்மை ஆட்கொண்ட கொற்றவாளீஸ்வரர் திருநெல்லைத் தாயின் திருவளால் அனைவருக்கும் கைகூடட்டும் என்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகிறேன்.

(கோவிலூரில் 22-8-92 அன்று நடைபெற்ற சிந்தனைப் பூங்கா நிகழ்ச்சியில் கோவிலூர் ஆண்டார் மன்றத்தின் தலைவர் தவத்திரு காசிவிசுவநாத ஞான தேசிக சுவாமிகள் ஆற்றிய ஆசியுரை.)



எனது ஆலய அனுபவங்கள்


வி.என். சிதம்பரம்

— 15 —

அன்றாடம் ஆற்றிய பணிகள்

அறங்காவலர் குழுத் தலைவராக நான் பொறுப்பேற்றபோது ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியவர் என்னிடம், ''ஃபைலை வீட்டிற்கு அனுப்பி வைக்கிறேன். கையெழுத்திட்டு அனுப்புங்கள். மாதமொருமுறை நடைபெறும் கூட்டத்திற்கு அவசியம் வருகை தந்து நடத்தித் தாருங்கள்'' எனச் சொன்னார். நான் அதற்கு மாறாக தினசரி காலை 10-00 மணிக்கு ஆலயத்திற்குச் சென்று ஃபைல்களை பார்க்கத் தொடங்கினேன். சில நாட்களிலேயே நிர்வாக அதிகாரி வெளியூர் அல்லது வெளியே செல்ல வேண்டுமென்றால் என்னிடம் அனுமதி பெற்றுச் செல்லவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டுவிட்டது. நான் சம்பளம் பெறாமல் அனுதினமும் காலை 10-00 மணி முதல் மதியம் 1-00 மணி வரை பணிபுரிந்ததே அதற்குக் காரணம். செருப்புக் குத்தகை ஆண்டுதோறும் ரூ. 15,000/-க்கு ஏலம் போனதை ரூ. 2,00,000/- ஆக உயர்த்தி ஆலயத்தின் வருவாயைப் பெருக்கினேன். அதே போன்று ஆலய பிரசாத ஸ்டால் குத்தகை, வெண்ணெய், எள்ளு விளக்குக் குத்தகை முதலிய ஏலங்களை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கினேன். ஆலயத்திற்குள்ளும் புது மண்டபத்திற்குள்ளும் கடை வைத்திருக்கின்ற உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து அவர்களுடன் பலநாட்கள் கலந்துரையாடி வாடகையில் 25 சதவீதம் உயர்த்தினேன். பொற்றாமரைக் குளத்திற்கு தண்ணீர் கொண்டுவருவதற்காக ஆழ்துளைக் குழாய்க் கிணறு ஏற்படுத்தினேன். அதை, கைராசி மிக்கவரும், நல்லெண்ணம் படைத்தவருமான லெட்சுமி பேப்பர் மு. சிங்காரம் செட்டியார் அவர்களைக் கொண்டு தொடங்கினேன்.

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் நிர்வாகத்திற்குட்பட்ட அருள்மிகு ஆதி சொக்கநாதர் திருக்கோவில், தெற்கு மாசி வீதியில் உள்ள அருள்மிகு தென்திருவாலவாய் சுவாமி திருக்கோவில் மதிற் சுவர்களில் திரைப்படம், அரசியல் மற்றும் பல்வேறு அமைப்புகளின் விளம்பரச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு



பொற்றுமரைக் குளத்தில் உள்ள பொற்றுமரையின் அழகிய தோற்றம்

அதன் காரணமாக ஆலயங்களின் புனிதத் தன்மை களங்கப்பட்டு வந்தது. கூர்மையான குமிழ் கற்களை மதிற் சுவற்றில் பொருத்தி சுவரொட்டிகள் ஒட்டினுல் அவை கிழிந்துபோகும் வகையில் ஏற்பாடு செய்தோம் அதிலிருந்து மதிற் சுவர்களில் சுவரொட்டி ஒட்டுவது நிறுத்தப் பட்டது.

மீண்டும் மிதந்த பொற்றாமரை

நாங்கள் மேற்கொண்ட முதற்பணி பொற்றாமரைக் குளத்தில் மீண்டும் தங்கத் தாமரையை மிதக்கவிட்ட பணியாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தெய்வப் புலவர் திருவள்ளுவர், தான் இயற்றிய உலகப் பொதுமறை நூலான திருக்குறளை அரங்கேற்றிய திருத்தலம்பொற்றாமரைக் குளமாகும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்விடத்தில் கடைச்சங்க காலமான மூவாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, தமிழ்ப் புலவர்கள் இயற்றிய பாடல்கள் பொற்றுமரை மீது வைத்து மிதக் கவிடப்படும். பாடல் தகுதியான தாக இருந்தால், தாமரையோடு பாடல் எழுதிய ஏடு மிதக்கும். தகுதியற்றதாக இருந்தால் தாமரையும் ஏடும் மூழ்கிவிடும் என்பது ஓர் கருத்து.

இச் சிறப்புமிக்க திருக்குளத்தில் காலங்காலமாக பொற்றா

மரை மிதந்து கொண்டிருந்ததால் இக்குளம் 'பொற்றாமரைக் குளம்' எனப் பெயர் பெற்று விளங்கி வருகிறது.

இப் பொற்றாமரை கடந்த முப்பதாண்டுகளுக்கு முன்பு திருப் பனந்தாள் மடாதிபதி அவர்க ளால் ஆலயத்திற்கு வழங்கப் பட்டதாகும்.

நாங்கள் பொறுப்பேற்பதற்கு பத்தாண்டு காலத்திற்கு முன் பாகவே திருக்குளத்தில் நீர்வற்றி விட்டதால் பொற்றாமரையை மிதக்கவிட இயலாமல் எடுத்து வைத்துவிட்டார்கள்.

எங்களது முதற்பணியாக நீர் வற்றியிருந்த திருக்குளத்தில் 'போர்வெல்' அமைத்து நீர் நிரப்பி, தங்க மூலாம் பூசி மீண் டும் புதுப்பிக்கப்பட்ட பொற்றா மரையை மிதக்க விட்டோம். 19-3-80 அன்று இந்து சமய அறநிலைய ஆணையாளர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் தலை மையில் மதுரை மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு. ஜி. செல்வராஜ் திருக்குளத்தில் அதனை மிதக்கவிட்டார்.

(வளரும்)

கொடை வள்ளல் லேனா!

நகரத்தார் சங்கங்களில் முதலிடம் பெறும் திருச்சி நகரத்தார் சங்கம் பட்டம் கொடுத்தால் அது உடனே பலித்துவிடும்! ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணனை சங்கத்தார் 'கொடை வள்ளல்' என அறிமுகப்படுத்தினார்கள். திரு. லேனா தனது பேச்சின் முடிவில் தன் மகனின் திருமணத்தின்போது ஏழைப் பெண் ஒரு வருக்குத் தனது செலவில் திருமணம் செய்து வைப்பதாக அறிவித்து உண்மையிலேயே 'கொடை வள்ளல்' ஆகிவிட்டார்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்


(திருச்சி நகரத்தார் சங்கத்தின் 43-ஆம் ஆண்டு விழாவில் பேசியது)

ஆறும் நூறும்!

''சேர்த்த பணத்தைச் சிக்கனமா, செலவு பண்ணப் பக்குவமா, அம்மா கையிலே கொடுத்துப்போடு சின்னக் கண்ணு.. அவுங்க ஆறை நூறு ஆக்குவாங்க செல்லக் கண்ணு...'' என்று ஒரு திரைப் படப் பாடல் உள்ளது. இப்பாடலின்படி பெண்கள் ஆறு ரூபாயை நூறு ரூபாயாக ஆக்குவார்கள் என்று பொருள் கொள்ளலாம். அதோடு ஆறு பேராக இருந்த குடும்பத்தை நூறு பேராக ஆக்குவார்கள் சில பெண்கள் என்றும் பொருள் கொள்ளலாம்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

(திருச்சி நகரத்தார் சங்கத்தின் 43-ஆம் ஆண்டு விழாக் கூட்டத்தில்)



அண்மையில் குடநீராட்டுச் செய்யப் பெற்ற தஞ்சாவூர் பாம் பாட்டித் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத் தின் முன்புறத் தோற்றம்.


தஞ்சாவூர் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்

தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த சோழ மன்னர்களுள் புகழ் பெற்ற இராஜராஜன் ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாநகரில் நகரத்தார் பெருமக்களால் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் கட்டப்பட்டு குடநீராட்டுச் செய்யப்பட்டதாகவும் அத்துடன் நகரவிடுதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டதாகவும் வரலாற்றுச் செய்தி கூறுகிறது.

கடல் வாணிபம் செய்ய வெளிநாடுகளுக்குச் செல்லும் நகரத் தார்கள் தஞ்சாவூர் வந்து நகர விடுதியில் தங்கி ஸ்ரீ சிந்தாமணி விநாயகரை வணங்கியபின் நாகபட்டினம் சென்று அங்கிருந்து வெளி நாடு பயணம் செய்து வந்தனர் என்றும் கால மாறுதல்களினால் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயமும் நகர விடுதியும் போற்றிப் பாது காக்கப்படாமல் போய்விட்டதாகவும் அறிய முடிகிறது.

இப்போது நகரத்தார் பெருமக்களின் முயற்சியாலும் ஊர்ப் பொது மக்கள், தஞ்சை பாம்பாட்டி தெருவைச் சேர்ந்த தெருவாசி கள் ஆகியோரின் உதவியாலும் சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் திருப்பணி செய்யப் பெற்று 10-6-92 அன்று குடநீராட்டுச் செய்யப் பெற்றது. அதனைத் தொடர்ந்து 27-7-92 அன்று மண்டலாபிஷேகமும் சிறப்பாக நிகழ்ந்தது.

இப்போது பாம்பாட்டித் தெருவில் நகர விடுதியும் சிறப்பாக இயங்கி வருகிறது.



மதுரை ஆடிவீதியில் உள்ள திருப்புகழ் சபையில் பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம் அவர்கள் கந்த புராணம் பற்றி தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நிறைவு நாளன்று (23-7-92) திருப்புகழ் சபை சார்பாக மீனாட்சி அம்மன் திருக்கோவிலைச் சேர்ந்த திரு. தங்கம் பட்டர் பேராசிரியருக்கு மலர் முடி சூட்டி, மலர் மாலை அணிவித்து வாழ்த்தினார்கள்.

பாகனேரி திரு. எம். கண்ணப்பன் திரு. சுந்தரமகாலிங்க நாடார், திரு. அமிர்தலிங்க பாண்டியன் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

படத்தில் பேராசிரியருடன் திரு. கிருபாசங்கர் (துணைச் செயலாளர்) திரு. தங்கம் பட்டர் திரு. கே. சுப்பிரமணியன் (பொருளாளர்) திரு. சுந்தரமகாலிங்க நாடார் ஆகியோர் உள்ளனர்.

ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்: மண்டலாபிஷேக விழா

தஞ்சாவூர் பாம்பாட்டித் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தின் மண்டலாபிஷேக விழா 27-7-92 அன்று சிறப்பாக நிகழ்ந்தது.

அன்று மாலை முனைவர் திருமதி சரஸ்வதி இராமநாதன் 'குமரனும் கொடியும்' என்ற தலைப்பில் இசைச் சொற்பொழிவு செய்தார். இரவு கே. ஆர். சந்திரமௌளி குழுவினரின் வயலின் இசைக் கச்சேரி நடைபெற்றது.

ஃ பொன்னமராவதி துர்க்கை அம்மன் கோவில் பங்காளிகள் (இளையாத்தக்குடி ஒக்கூர் பிரிவு) வழக்கம்போல் இந்த ஆண்டும் 24-7-92 அன்று மகேஸ்வர பூஜையையும் 3-8-92 முதல் 5-8-92 முடிய மூன்று தினங்கள் படைப்பு விழாவையும் சிறப்பாக நடத்தினார்கள்.

லேனாவின் யோசனையும் கணபதியின் பதிலும் !

கூட்டுத் திருமணத்தை அடுத்தடுத்து நடத்திவைக்கும் திருச்சி நகரத்தார் சங்கத்தைப் பாராட்டும் நான், அவர்களிடம் ஒன்றே ஒன்றை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நம்மினத்தில் திருமணம் செய்துகொண்ட தம்பதியர் பலர், பற்பல காரணங்களினால் பிரிந்து வாழுகின்றார்கள். அப்படிப் பிரிந்து வாழும் அவர்களை இணைத்து வைக்கும் பாலமாக புண்ணியப் பணியையும் சங்கம் செய்து வந்தால் மணம்செய்து வைத்தலிலும் இதனை இன்னும் பெரிதாகக் கருதுவேன்.

— லேனா தமிழ்வாணன்

பிரிந்து வாழும் தம்பதியர் யார், யார் என்னும் பட்டியலை ''நகரத்தார் குரல்'' போன்ற நம் சமூக இதழ்கள் விவரமாகத் தருமானால் அதனைப் பின்பற்றி திருச்சி நகரத்தார் சங்கம் அப் புண்ணியப் பணியையும் செய்து வைக்கும் என்று சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

— எஸ் ஓ. ஆர் எம். கணபதி செட்டியார்
(தலைவர், திருச்சி நகரத்தார் சங்கம்)

(திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 25–7–92 அன்று நடைபெற்ற 43 ஆவது ஆண்டு விழாக் கூட்டத்தில்)




திருச்சி நகரத்தார் சங்கத்தின் 43 ஆவது ஆண்டுவிழாவில் சிறப்பு விருத்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய திரு. லேனா தமிழ்வாணனுக்குச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஓ. ஆர்எம். கணபதி செட்டியார் நினைவுப் பரிசு வழங்கும் இனிய காட்சி.

செல்வமும் செல்வகணபதியும்!

சேலத்தில் கவியரசர் கண்ணதாசன் விழா அண்மையில் இரண்டு தினங்கள் சிறப்பாக நிகழ்ந்தது. அந்த விழாவில் தமிழக அமைச்சர் மாண்புமிகு செல்வகணபதி அவர்களும் கலந்துகொண்டு பேசினர்கள்.



அப்போது நமது இதழின் ஆசிரியரும் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற மாநிலத் தலைவருமான திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் ''ஆதி சங்கரர் இயற்றிய கனகதாரா ஸ்தோத் திரத்தைக் கவியரசர் கண்ணதாசன் ''பொன் மழை'' என்றபெயரில் தமிழாக் கம் செய்திருக்கிருர். அந்த நூலைப் படித் தால் செல்வம் வரும் என்று எழுதியிருக் கிருர். நாங்கள் அதைப் படித்தோம். செல்வமும் வந்தது. பல அலுவல்களுக் கிடையே அமைச்சர் மாண்புமிகு செல்வகணபதி அவர்களும் வந்திருக்கிருர்கள்'' என்று கூறியபோது கூட்டத்தில் பலத்த கரவொலி எழுந்தது.



திருச்சி மாவட்ட அடகு பிடிப்போர் & கடன் வழங்குவோர் கழகத் தலைவரும் திருச்சி நகரத்தார் சங்கத்தின் முன்னாள் தலைவரு மான தேவகோட்டை திரு. ஏவி. கே. ஆவிச்சி செட்டியாரின் புதல் வன் காசிநாதனுக்கும் மேற்படி ஊர் திரு. அள. வீர. பெ. செந்தில் நாதன் செட்டியார் புதல்வி வள்ளிக்கண்ணுவுக்கும் 6-7-92 அன்று தேவகோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமணன் தலைமை யில் வாழ்த்தரங்கமும் நடைபெற்றது.

காவிரிப்பூம்பட்டினத்தில் பேரவை நிகழ்ச்சி

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகள் அற்புதத் திருவிழாவை யொட்டி 11-8-92 அன்று பேரவை நிகழ்ச்சி தொடங்கியது. விகடம் திரு. காசிச் செட்டியார் தலைமை ஏற்க முனைவர் திரு. ச. மெய்யப்பன் தொடக்க உரை நிகழ்த்தினர். காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் 'சிறுத்தொண்டர் நாயனர்' பற்றியும் புலவர் மாமணி திரு. மா. முத்துராமன் 'பட்டினத்தார்' பற்றியும் உரை நிகழ்த்தினர்கள்.

அரு. சோ. வின். பிறந்த தின விழா

காசிஸ்ரீ திரு அரு. சோமசுந்தரனின் 57 ஆவது பிறந்த தினவிழா வயிரவன்பட்டியில் 14-8-92 அன்று அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக நடைபெற்றது. தென்காசி ஆதீன கர்த்தர் தலைமை தாங்கிப் பொன்னடை போர்த்தினர். வயிரவன் கோவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கத்தின் செயலாளர் திரு. ராம. வீர. பெரி. பஞ்சநதம் செட்டியார் தொடக்க உரையாற்றினர். புலவர் மாமணி திரு. மா. முத்துராமன், முனைவர் திரு. கரு. முத்தையா, திரு. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

மணி விழா

பாகனேரி திரு. தெ. நா. சொ. நாச்சியப்ப செட்டியார் - திருமதி கலியாணி ஆச்சியின் அறுபதாம் ஆண்டு நிறைவு மணிவிழா 20-8-92 அன்று பாகனேரியில் சிறப்பாக நடைபெற்றது.

மணி விழாவை ஒட்டி அன்று 'கவிதைத் தென்றல்' திரு கரு. கருப்பையா நடுவராக இருக்க, வழக்காடு மன்றம் நடைபெற்றது. 'கண்ணதாசனின் நிலைத்த புகழுக்குக் காதல் பாடல்களே என்பது குற்றம்' என சித்ரா கணபதி வழக்குத் தொடுக்க திரு. அப்துல் ரகுமான் மறுக்க 'நிலைத்த புகழுக்குக் காரணம் காதல் பாடல்களே என்பது குற்றமில்லை' என நடுவர் தீர்ப்பு வழங்கினர்.

இவ் வழக்காடு மன்றத்திற்கு பாகனேரி திரு. வே. வேலாயுதம் செட்டியார் முன்னிலை வகித்து உரையாற்றினர். ஆசிரியர் திரு. அ. இராமநாதன் என்ற செல்வமணி நிகழ்ச்சியை நடத்தி வைத்து நன்றி கூறினர். திரு. நா. சேனப்பன் பொன்னடை அணிவித்தார்.

கோவிலூரில் சிந்தனைப் பூங்கா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் சிந்தனைப் பூங்காவின் 12 ஆவது நிகழ்ச்சி 22-8-92 அன்று காலை சிறப்பாக நடைபெற்றது. கோவிலூர் ஆதீனகர்த்தர் தவத்திரு காசிவிஸ்வநாத ஞான தேசிக சுவாமிகள் தலைமை தாங்கினார்கள், காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் வரவேற்றார். முனைவர் திரு. பழ. முத்தப்பன் ''மூலத்ததாகி வரும் முறைமை'' என்பது பற்றிச் சிந்தனை உரை நிகழ்த்தினார்.

கோவிலூரில் ஆடிப் பூரத் திருவிழா

கோவிலூர் ஆதீனத்தின் சார்பில் திருநெல்லை அம்மன் கோவிலில் ஆடிப் பூரத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. 29-7-92 மாலை 'காசிஸ்ரீ' திரு. அரு. சோமசுந்தரன் உபன்யாசம் நிகழ்த்தினார். கோவிலூர் ஆதீனகர்த்தர் தலைமை தாங்கிப் பொன்னாடை போர்த்தினார்கள்.

ஆடிப் பூரத்தை முன்னிட்டு கவியரங்கம்

காரைக்குடி நகரச் சிவன் கோவிலில் ஆடிப் பூரத் திருநாள் ஆன்மீகப் பேரவையில் 28-7-92 அன்று மாலையில் காரைக்குடி இந்து மதாபிமான சங்க ஆதரவில் நடைபெற்ற கவியரங்கிற்கு காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் தலைமை தாங்கினார். சங்கச் செயலாளர் திரு. நா. மீனவன் வரவேற்று நன்றி கூறினார்.

விருது பெற்ற ஆவுடையப்பன்

ஏரோப்ளேன் ஆவுடையப்ப செட்டியார் அவர்கள் பேரனும் காரைக்குடியைச் சேர்ந்த வழக்கறிஞர் திரு. ஆ. இராமநாதன் - திருமதி சிவகாமி ஆச்சியின் புதல்வனுமான திரு. இராம. ஆவுடையப்பன் M. Tech. பட்டதாரி ஆவார்.


இவர் இப்போது தூத்துக்குடி ஸ்பிக் நிறுவனத்தில் Process Engineer ஆகப் பணியாற்றி வருகிறார்.

இவர் அந்நிறுவனத்தில் Operation Engineer ஆகப் பணியாற்றியபோது உற்பத்தி நடைமுறையில் சில மாறுதல்களைச் செய்ய ஆலோசனைகள் கூறி அதன்படி செயல்படுத்தியதால் எரிபொருள் சிக்கனம், உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகியவை மூலம் அந்நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு சுமார் 60 இலட்சம் ருபாய்க்கு மேல் இலாபம் கிடைத்துள்ளது.

அதன் அடிப்படையில் அந்நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் தமிழக அரசு இவரைக் கௌரவித்துள்ளது.

சென்னை கலைவாணர் அரங்கில் 16-7-92 அன்று நடைபெற்ற விழாவில் திரு. ஆவுடையப்பனுக்கு தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் 'ShramVir' விருதும் ரொக்கப் பரிசும் அளித்துப் பாராட்டினார்கள்.

திரு. ஆவுடையப்பனைப் பாராட்டுவதோடு அவர் மேலும் புகழ் பெற வாழ்த்துகிறோம்.



தமிழக அமைச்சர் மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் திரு. இராம. ஆவுடையப்பனுக்கு விருது அளித்துக் கௌரவிக்கும் காட்சி.



கோவையில் திருமுறை மாநாடு

கவிஞர் திரு. எல். சோமுவை சிறப்புத் தலைவராகக் கொண்டு இயங்குகிற நால்வர் நற்பணி மன்றத்தின் சார்பில் திருமுறை மாநாடு 13-8-92 முதல் நான்கு நாட்கள் கோவையில் நடத்தப் பெற்றது. 14-8-92 அன்று திரு. சொ. சொ. மீ. சுந்தரம் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 15-8-92 அன்று காசிஸ்ரீ திரு. அரு. சோமசுந்தரன் "திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும்" என்பது பற்றி உரையாற்றினர். 16-8-92 அன்று திரு. எல். சோமுவுக்கு "திருமுறை நெறிக் காவலர்" என்ற விருது வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றது.

துலாவூரில் குருபூசை

நகரத்தார் பெண்கள் குரு பீடமாகிய துலாவூரில் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகளின் குரு பூசை 12-10-92 திங்கட்கிழமை காலை முதல் இரவு வரை சிறப்பாக நிகழ இருக்கிறது. நகரத்தார் குரு பீடங்களின் அதிபர்களும் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இரகுபதி மற்றும் பல பெரியவர்களும், சான்றோர்களும் கலந்து கொள்கின்றனர். அவ்வமயம் பாகனேரி திரு. இராம. முத்துப்பழநியப்ப செட்டியார் அவர்களுக்கு "அறமனச் செம்மல்" என்ற விருது வழங்கப் பெற இருக்கிறது.

பழமுதிர்சோலைக்குப் பாத யாத்திரை

தேவகோட்டையிலிருந்து பழமுதிர்சோலைக்குச் செல்லும் பதினைரும் ஆண்டுப் பாத யாத்திரையினை 22-7-92 காலை 'காசிஸ்ரீ' திரு அரு. சோமசுந்தரன் தொடங்கி வைத்தார். காசிஸ்ரீ திரு. ஆர். வயிரவன், காசிஸ்ரீ திரு. இராம. நாராயணன் ஆகியோர் தலைமையில் ஏராளமான பக்தர்கள் பாதயாத்திரை சென்று 25-7-92 அன்று மூன்று காவடிகளும், ஆறு பாற்குடங்களும் செலுத்தி வழிபட்டனர்.



இள நிலவே கண்வளராய்

— பிரேமா சாத்தப்பன், நெற்குப்பை —

கருவிற்குள் வந்துதித்த கற்பகமே கண்வளராய் !
திருவளரத் தோன்றிய என் தென்றலே கண்வளராய் !

நெஞ்சுக்குள் நான்காக்கும் நல்மணியே கண்வளராய் !
கொஞ்சும் மொழிபேசும் கோவில் மணியே கண்வளராய் !

அப்பா பேர்சொல்லப் பிறந்த கண்ணனடா ! ஆடிட்டர்
அய்யாவின் வழிநடந்து பேரெடுக்கும் வண்ணனடா !

சிங்கார வாய்திறந்து சிரித்து மயக்கிடுவாய் !
ஒய்யார நடை நடந்து உள்ளமதைக் கவர்ந்திடுவாய் !

சளைக்காது அடம்செய்து சடுதியில் சமர்த்தனாகி,
களைப்பது தீரவென் கரங்களில் வந்துறங்கு !

ஆடிப்பாடி அலைந்தோய்ந்த அருமைக் கண்ணே,
ஓடியாடிய உன் அலுப்புத்தீரக் கண்ணுறங்கு !

எண்ணமெல்லாம் எனக்கு உன்னைப் பற்றித்தான் !
வண்ணமாய்க் கனவுகளும் உன்னைச் சுற்றித்தான் !

அம்மாவின் மடியுனக்கு சுகமான மெத்தையடா !
சும்மா நீயுறங்கு ! சுந்தரக் கண்ணுறங்கு !

அப்பாவின் தோளுனக்கு அழகான தொட்டிலடா !
அதிலே சாய்ந்து நீ அமைதியாய்க் கண்ணுறங்கு !

பாலருந்தி முடித்துப் பகல்பொழுதில் படுத்திடுவாய் !
சேலைத் தலைப்பினிலே செல்லமாய்க் கண்வளராய் !

பெருமைக்குரிய ஆச்சிமார்களே! உங்களுக்குத் தெரிந்த தாலாட்டுப் பாடல்களை தாலாட்டுப் பகுதி, ''நகரத்தார் குரல்'', மதுரை - 625 009 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அது பலருக்கும் உதவட்டும்.

நாளைய உலகமதில் நல்முத்தே நீ வளர்ந்து,
காளையாய் உலாவரும் காலம்வரும், கண்வளராய் !

வேளையது வந்திடுமே விநாடிப் பொழுதிலே,
மாலைத்தென்றல் போல் மனதுக்கது சுகந்தருதே !

சிப்பியிலே ஒளிதரும் முத்துப்போல் பிரகாசித்து,
தப்பாமல் தர்மம் செய்த பாட்டியை நினைந்துறங்கு !

எப்போதும் எங்களில்லக் கண்ணனாய் நீசிறந்து,
செப்புவாய் மலர்ந்து சிங்காரக் கண்ணுறங்கு !

துறுதுறுப்பாய்த் திரிந்திடும் தூமணியே கண்வளராய் !
சுறுசுறுப்பாய் இருந்திடும் சுகந்தமே கண்வளராய் !

பல்லோரும் பண்பாட பைங்கிளியே கண்வளராய் !
வல்லோரும் கவிபாட வசந்தமே கண்வளராய் !

கண்ணே நீ பாலருந்தி களிப்புடனே கண்வளராய் !
உன்தாய் தாலாட்ட உவகையுடன் கண்வளராய் !

கண்ணில் வைத்துஎம்மைக் காத்திடப் பிறந்த - என்
கண்ணன கண்ணே, கனிமுத்தே கண்வளராய் !

என்னில் வளர்ந்து, எழிலாய் உதித்திட்ட
இளநிலவே கண்வளராய் ! என்முத்தே கண்வளராய் !

தாலாட்டில் இராமாயணம்

வயி சொ. அரு. தெய்வானை ஆச்சி, கீழப்பூங்குடி

அயோத்தி நாடாளும் ஆன தசரதற்கு
பையரவை விட்டெழுந்து பாலகனாய் வந்தகண்ணே
அரசாள எங்களுக்கு அருமைமகன் வேணுமென்று
வரிசைத் தசரதரும் வளர்த்திடவே யாகமது
திக்கினில் உள்ளவர்கள் திசைஎட்டும் கொண்டாட
அக்கினி தேவனுமே அமிர்தமது தான்கொடுக்க
வாங்கித் தசரதரும் வழங்கிடவே மூவருக்கும்
தாங்கிக் கருவடைந்த தற்பரனும் நீர்தானே
கோசலையாள் தனக்குக் குழந்தைஎனத் தான்பிறந்து
வாசமுள்ள தம்பியுடன் வளர்ந்துவந்த ராமனே நீ
ஐந்தாம் வயதுதனில் அம்பெடுத்துத் தான்பழகிச்
சொந்தமுள்ள கூனியின்மேல் சுண்டுவில் தெரிந்தவனே
வாழைக் குருத்துப்போல் வளர்ந்துவரும் நாளையிலே
சோலையில் வாழ்மாமுனியை துணைப்பிடித்துச் சென்றவனே
தாடகையாள் ராட்சசியைச் சரந் தொடுத்துப்
போக்கடித்து ஆடரவில் பள்ளிகொண்ட அரிராம ராகவனே
அகலிகையாள் சாபமதை அகற்றிவந்த ராமனேநீ

சிலையுமுறித்தெறிந்து சீதாவைமாலையிட்ட ஸ்ரீராமன் நீ தானே
வையகத்தார் தானறிய வாய்த்த கொடுங்கூனியினல்
தம்பிஇளையோனுடனும் ஜானகியாளோடும்
வனம்சென்று வந்தகண்ணே
குகப்பெருமான் கொடுத்த கொம்புத்தேன் உண்டு
கூடிமகிழ்ந்தவனே
பரதனுக்குப் பாதரட்சை பணிந்திட முன்வந்தவனே
பஞ்சவடி தனிலே பர்ணகசாலை யமைத்து
அஞ்சாமல் வீற்றிருந்த அரிராம ராகவனே
சூர்ப்பநகை வந்திடவே துரத்திமூக்கறுத்த பாலகனே
மாரீசனுனவனும் மான்வேடத்தோடு வர
வீரீட்டு தான்வீழ்க வேணசரம்விட்ட கண்ணே
தெரியாமல் ராவணனும் சீதாவை கொண்டேக
சிறுகுரங்கைத் தூதனுப்பி தெரிந்துவந்த சேவகமோ
வாலிதனைமடித்து வானரத்தால் சேதுகட்டி
ஆழிதனைக் கடந்த அச்சுதனும் நீ தானே
ராவணன் கும்பகர்ணன் நல்லஇந்திர சித்தனையும்
தாவிமடித் தொழித்த தாமோதரப் பொருளோ
ராமாயணம் நடத்தி ராட்சதரைப் போக்கடித்துச்
சீதாவை சிறைமீட்டி திரும்பிவந்து அயோத்தி
மாதாமனம் மகிழ மகிழ்ந்தரசு செய்தவனே
ஆராரோ ஆரிரரோ ஆராரோ ஆரிரரோ.

ஆசிரியருக்கு வானதி எழுதிய கடிதம்

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய உயர்திரு. வி.என்.சிதம்பரம் அவர்களுக்கு. வணக்கம். நலம். நலத்திற்குப் பிரார்த்திக்கிறேன்.

''நகரத்தார் குரல்'' ஆகஸ்ட்' 92 இதழில் தாங்கள் என்னைப் பற்றி எழுதியுள்ள கட்டுரை அருமையாக, மிக உயர்வாக உள்ளது. என்னைப் பற்றியும் நேமம் கோவிலில் பிறந்த என் துணைவியாரைப் பற்றியும் அதில் அற்புதமாக எழுதியிருக்கிறீர்கள். உழைப்பின் பெருமையையும் ஆச்சியின் ஒத்துழைப்பையும் பற்றிக் குறிப்பிட்டிருப்பது அதனைப் படிக்கும் மற்றவர்களுக்கு நம்பிக்கையையும் துணிவையும் ஏற்படுத்தும் என நம்புகிறேன்.

இத்தகைய நற்பணிகளைச் செய்துவரும் தங்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும்.

வானதியின் புத்தக வெளியீட்டு விழாவிற்கு (14-8-92) வருகை தந்து தாங்கள் சிறப்பித்தது எனக்குப் பெருமகிழ்வைத் தந்தது. ஆச்சியும் ரொம்பப் பாராட்டினுள். பிறந்த இடத்து மனிதர்களைக் கண்டால் பெண்களுக்குப் பேருவகை தானே!

தங்களுக்கு எனது அன்பும் பாராட்டும் நன்றியும் உரித்தாகுக.

அன்புள்ள
ஏ. திருநாவுக்கரசு

'தமிழ்க் கடல்' இராய. சொக்கலிங்கனார்

ஃ 'பரணியிற் பிறந்தவர் தரணியை ஆள்வார்' என்று உலகம் சொல்லும், 'தமிழ்க் கடல்' இராய, சொ. அவர்கள் பரணி நட்சத்திரத்தில் 30-10-1898ல் பிறந்தார்கள்.

ஃ இராய. சொ. இளமைக் காலத்தில் காரைக்குடியில் சுப்பையா என்ற ஆசிரியரிடம் திண்ணைப் பள்ளியில் கல்வி கற்றார்கள் பின்னர் தமிழாசிரியர் பண்டித சிதம்பர அய்யரிடம் தமிழ் இலக்கண, இலக்கியப் பாடங்களைக் கற்றார்கள்.

ஃ இவர்களது திருமணம் 21-6-1918ல் பள்ளத்தூரில் நடைபெற்றது. துணைவியாரின் பெயர்: உமையாள் ஆச்சி.

ஃ காரைக்குடியில் உள்ள இந்து மதாபிமான சங்கத்தைத் தோற்றுவித்த நகரத்தார் பிரமுகர்களில் இராய. சொ. குறிப்பிடத் தக்கவர்.

ஃ காரைக்குடியிலிருந்தும் சென்னையிலிருந்தும் வெளிவந்த "ஊழியன்" இதழின் ஆசிரியராக இவர்கள் இருபதாண்டுக் காலம் பணியாற்றினார்கள்.

ஃ காந்தியடிகள் காட்டிய நெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இராய. சொ. அவர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் சேர்ந்து 1932ல் ஓராண்டுச் சிறைத் தண்டனை அடைந்தார்கள்.

ஃ காந்தியடிகள் தென்னாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது (1934ல்) இராய. சொ. அவர்களின் இல்லத்திற்கு வந்து விருந்துண்டு பெருமைப்படுத்தினார்கள்.

ஃ 1938 முதல் 1941 வரை இவர்கள் காரைக்குடி நகராட்சியின் தலைவராகச் சேவை ஆற்றியிருக்கிறார்கள்.

ஃ காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தார் 31-10-1958ல் இவர்களது மணிவிழாவைக் கொண்டாடி இவர்களுக்குத் 'தமிழ்க் கடல்' என்ற பட்டத்தைச் சூட்டினர். இவர்களுக்கு சிவமணி, சிவம் பெருக்கும் சீலர், வண்கவி வள்ளல் போன்ற சில சிறப்புப் பெயர்களும் உண்டு.

ஃ இராய. சொ. வின். துணைவியார் 1-10-1960லும் இராய. சொ. அவர்கள் 30-9-1974லும் இறைவன் திருவடி அடைந்தார்கள்.

தொகுப்பு : "எல்லெஸ்"

இறைவன் அடியார்களுக்குப் பார்வதி தேவியுடன் காட்சி கொடுத்தார். ஆனால் பிள்ளைக் கறி சமைத்த சிறுத் தொண்டருக்கு சோமாஸ்கந்தருடன் காட்சி கொடுத்தார். இது ஒரு தனிச் சிறப்பாகும்.

— காசிஸ்ரீ அரு. சோமசுந்தரன்

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத் தடிகளின் அற்புதத் திருவிழாவில் 8-8-92 அன்று நடைபெற்ற பேரவை நிகழ்ச்சியில்)

இன்றையத் தேவை

பேராசிரியர் இராம. சேதுநாராயணன்
(முன்னுள் துணை வேந்தர், அண்ணுமலைப் பல்கலைக் கழகம்)

''நகரத்தார் குரல்'' ஜுலை' 92 இதழில் ''நகரத்தார் சுய நிதிப் பல்கலைக் கழகம்'' என்ற தலைப்பில் அழகப்பா பல் கலைக் கழகத் துணை வேந்தர் முனைவர் திரு. கே. நாகப்பன் எழுதிய கட்டுரை, நம்மினத்து மாணவர்கள், பெற்றோர்கள், செல்வந்தர்கள், நகரத்தார் சங் கங்கள் போன்ற அனைவரையும் சிந்திக்கச் செய்து செயலில் ஈடு படச் செய்யுமென நம்புகிறேன்.

இன்றைய உலகில் 'அறிவே வலிமை', 'அறிவுடையார் எல் லாம் உடையார்', 'உயர் கல்வியே வாழ்வின் உயர்விற்கு உறுதுணை' என்ற உண்மைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ள தோடு முற்பட்ட சமூகமான நமக் குள்ள தடைகளையும் விளக்கியுள் ளார். நம்மைப் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதில் பெரும் பயனில்லை. தன் கையே தனக் குதவி என்பதற்கிணங்க நாமே நம் முயற்சியால் முன்னேற வேண்டும் என்பதையும் கோடிட் டுக் காட்டியுள்ளார். இக் கருத்தை நான் முற்றிலும் ஆமோதிக்கிறேன்.

தற்போது தொழில் கல்லூரி இடங்களுக்கு (Professional Courses) வெளியிடப்பட்டுள்ள மாணவர் சேர்க்கையில் முற்பட்ட இனத்திற்கும் பிற்பட்ட இனத் திற்கும் உள்ள குறைந்த படச மதிப்பெண்களின் (Cut off-Marks) வித்தியாசம் மிகக் குறைவு. அதைக் கீழ்க்கண்ட பட்டியல் விளக்கும் :

பொறியியல்

முற்பட்ட வகுப்பு	- 42.9
பிற்பட்ட வகுப்பு	- 41 7
வித்தியாசம்	- 1.2

மருத்துவம்

முற்பட்ட வகுப்பு	- 47.5
பிற்பட்ட வகுப்பு	- 45.8
வித்தியாசம்	- 1.7



நம்மினத்தவர் பலர் என் னிடம் பொறியியல் கல்விக்கு இடம் வேண்டி நாடிவரும்போது ''நம் சமூகம் பிற்பட்டோர் பட்டி யலில் சேர்க்கப்பட்டிருந்தால் தொல்லைகள் இருந்திராது'' என் பர் நான் அவர்களிடம் அவர்கள் மகன் அல்லது மகள் பெற்றிருக்


கும் மதிப்பெண், பிற்பட்ட வகுப்பினருக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ள குறைந்த பட்ச மதிப்பெண்ணை விடக் குறைவானதுதான் என்பதை எடுத்துக்காட்டி இவ்வாதம் பயனற்றது என்பதை நிரூபித்திருக்கிறேன். இதனால் பயனடையக் கூடியவர்கள் மிக மிகக் குறைவே. எனவே நாம் அதனை நினைத்து வருந்தாமல் நாம் நாமாக முன்னேறக்கூடிய வழிகளை ஆராய்ந்து செயல்பட வேண்டியதே இன்றையத் தேவை.

சோதனைகளை வேதனைகளாக்காமல் சாதனைகளாக மாற்றக் கூடிய ஆற்றல் படைத்தவனே வாழ்வில் முன்னேற முடியும். இதற்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோளான, 'தைரியமும் தன்னம்பிக்கையுமே' தாரக மந்திரம்.

இன ஒதுக்கீட்டு விதியால் முதலில் மிகவும் பாதிக்கப்பட்ட சமூகம், பிராமண சமூகம் எனப் பலர் கருதினர். இந்தியாவின் தலைசிறந்த நிர்வாகியான மேதை, காலஞ்சென்ற, முனைவர் சி. பி. இராமஸ்வாமி ஐயர், ஒரு முறை ''தமிழ் நாட்டில் இன்று மிகவும் முன்னேறியுள்ள சமூகம் பிராமண சமூகம்தான். காரணம் பெரியார் வகுத்த இன ஒதுக்கீட்டுக் கொள்கைதான். அதனால், அரசு நிறுவனங்களில் குமாஸ்தாக்களாகவும், துவக்கப் பள்ளி ஆசிரியர்களாகவும் பணியாற்றி வந்த பல பிராமண சமூகத்தினர், காலத்தின் கட்டாயத்தால், தங்கள் அறிவாற்றலாலும், விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும், புதிய தொழில்களைத் துவங்கவும், வெளி நாடுகளுக்குச் செல்லவும் முற்பட்டனர். அதில் மாபெரும் வெற்றி கண்டு இன்று நல்லநிலையில் உள்ளனர்'' என்றார்.

அண்மைக் காலத்திலே, நம் இளைஞர்களிடையே ஒரு விழிப்புணர்வைக் காண்கிறேன். முக்கியமாகப் பொறியியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள், படிக்கும்போதே, வெளிநாட்டுக்குச் சென்று மேல்படிப்புப் படித்து, அங்கு பணிபுரிந்து வாழ்க்கையில் முன்னேற ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களில் பலருக்கு நான் அவர்கள் முயற்சி திருவினையாக உதவியிருக்கிறேன். இன்று அமெரிக்காவில் நம் சமூக பொறியியல் வல்லுநர்களும், மருத்துவ நிபுணர்களும் நூற்றுக் கணக்காக உள்ளனர். இதற்குக் காரணம் நம் மரபு வழிவந்த, தன்னம்பிக்கையும், வாழ்வில் உயர வேண்டும் என்ற உத்வேகமும்தான். இது நம் குலப் பண்பிற்கும் மரபிற்கும் ஏற்றதாகும். நான் அடிக்கடி மாணவர் குழுவில் பேசும் பொழுது ''You Should be Job Makers and not Job Seekers'' என்று அறிவுரை கூறி பல உதாரணங்களுடன் விளக்கி, அவர்களை ஊக்குவிப்பேன்.

இயற்கையிலேயே அறிவாற்றலும், மெய்வருத்தம் பாராது கருமமே கண்ணாகக் கொண்டு உழைக்கும் மனோபாவமும் கொண்ட நம் இளைஞர்கள் 'நம்மால் முடியும்' என்ற தன்னம்பிக்கை கொள்வார்களானால்,




வேலூரில் நடைபெற்ற கண்ணதாசன் விழாவிற்கு வருகை தந்தவர்கள் (இ-வ) திருமதி மீனாட்சி லெட்சுமணன், நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமணன், தொழிலதிபர் திரு. மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார், திரு. பிஆர். மெய்யப்பன் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், திரு. ராம. சே பழநியப்பன் மற்றும் பலர்.

அவர்கள் வாழ்வு ஒளிமயமாக அமைவது திண்ணம். நம் சமூகம் மீண்டும் பழம் பெருமை பெறும்.

இருப்பினும் நம் இளைஞர்கள் கல்வி அறிவு பெறுவதற்கு வழி அமைத்துக் கொடுப்பது, நம் சமூகத் தலைவர்கள், செல்வந்தர்கள், அறிஞர்கள், சங்கங்களின் கடமையாகும். முனைவர் திரு. நாகப்பன் சுயநிதிப் பல்கலைக் கழகம் அமைக்க முற்படவேண்டுமெனக் கூறியுள்ளார். பல தனிப்பட்ட சமூகங்கள், இந்திய நாட்டின் பல பாகங்களிலும், முக்கியமாக தமிழ் நாட்டில் சுயநிதிக் கல்லூரிகளை (கலை, விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம்) அமைத்து அவரவர் சமூகத்து மாணவருக்குத் தனிச் சலுகை காட்டி வருகின்றன. அந்த அடிப்படையில், பல்கலைக் கழகத்திற்கு முன்னோடியாக, நம் சமூகத்திற்கென சுயநிதிக் கல்லூரிகள் நிறுவ முயற்சிக்கலாம். இது எளிது அரசு இதை அனுமதிக்கின்றது. தடைகள் எதுவும் இல்லை. முயற்சிதான் தேவை.

முதலில் சென்னை, மதுரை, கோவை, சேலம் போன்ற மாநகரங்களில் இயங்கும் நகரத்தார் சங்கங்கள், அம்மாநகரங்களுக்கு அருகில் இத்தகைய சுயநிதிக் கல்லூரிகளைத் துவங்க முயற்சி எடுக்க வேண்டும். இம்முயற்சிக்கு நம் இனத்துச் செல்வந்தர்கள், தொழில் அதிபர்கள், கல்வி நிபுணர்கள் அனைவரும் உதவ முன் வரவேண்டும். அத்தகைய

கல்லூரிகட்கு ஒய்வுபெற்ற நம் மினத்து ஆசிரியர்கள், சமூக சேவையாகக் கருதிப் பணிபுரிய முன் வர வேண்டும் அன்று ஔவைப் பிராட்டியார் சோழ மன்னனை 'வரப்புயர' என்று வாழ்த்தினர். அதன் பொருள் 'வரப்புயர நீருயரும்; நீருயர நெல்லுயரும்; நெல்லுயரக் குடி உயரும்; குடி உயரக் கோன் உயரும்; கோன் உயரக் கோல் உயரும்' என்பதாகும். அதேபோன்று நம்மினத்து வள்ளல்கள், அறிஞர்கள், நகரத்தார் சங்கங்கள், முயற்சித்து செயல்பட்டு நம் சமூக இளைஞர்கள் கல்விப் பயன்பெற வித்திட்டால், நம் சமூகம் வளர்ச்சி பெறவும் நாடு நலம் பெறவும் வழி வகுத்தவர்கள் ஆவார்கள்.



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ தவத்திரு குட்டைய சுவாமிகளின் 120 ஆவது ஆண்டு குருபூஜை 11-9-92 வெள்ளிக் கிழமை முற்பகல் மதுரை தெற்கு வெளிவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ குட்டைய சுவாமிகள் மடாலயத்தில் நடைபெற உள்ளது.

ஃ மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் நான்காம் ஆண்டு நிறைவு விழா, நகரத்தார் இளைஞர் தின விழாவாக 2-10-92 அன்று மதுரையில் கொண்டாடப்பட விருக்கிறது. அதனையொட்டி 6, 13, 20, 27-9-92&2-10-92 ஆகிய தேதிகளில் 81 போட்டிகள் நடைபெற உள்ளன.

ஃ மதுரை நகரத்தார் புத்தக வங்கியின் சார்பாக வழக்கறிஞர் திரு. பழ இராமசாமி 1992 ஆம் ஆண்டுக்கு 'சிறந்த நகரத்தார் இளைஞ'ராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். 2 10-92 அன்று நடைபெற உள்ள விழாவில் இவர் விருது பெறுவார்.

ஃ திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக பிள்ளையார்பட்டியில் 6-9-92 (ஞாயிறு) அன்று இரு கூட்டுத் திருமணங்கள் நடைபெற உள்ளன.

ஃ திருச்சி தேசியக் கல்லூரியில் பயின்ற திரு. எம். இரவிச்சந்திரன் (மேலைச்சிவபுரி திரு. ஆ. முத்துராமனின் புதல்வர்) 1992 பொதுத் தேர்வில் பி. ஏ. பொருளாதாரத்தில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றுள்ளார். இவர் 1989 - 90ல் பொருளாதாரப் புள்ளியலில் முதல் பரிசும் 1990-91ல் அங்காடியியலில் இரண்டாவது பரிசும் நாட்டுநலப் பணித் திட்டத்தில் சிறந்த பணியாற்றிய மைக்காகக் கல்லூரியில் பரிசும் பெற்றுள்ளார்.

ஃ கோவிலூர் ஆண்டவர் மன்றத்தின் தலைவர் தவத்திரு

காசி விஸ்வநாத ஞானதேசிக சுவாமிகளின் பிறந்த தின விழா 5-9-92 அன்று கோவிலூரில் நடைபெற உள்ளது.

ஃ தேவகோட்டை காட்டுத் தண்ணீர்ப் பந்தலில் 5-8-92 அன்று சுந்தரர் குருபூஜை சிறப் பாக நடைபெற்றது

ஃ புதுக்கோட்டை மாவட் டம் கொப்பனுபட்டி மு. ந. சுப் பையா கோவில் வீட்டு மகேஸ்வர பூஜை 38 ஆண்டுகளுக்குப் பின்பு 6-8-92 முதல் 9-8-92 முடிய நான்கு நாட்கள் சிறப்பாக நடை பெற்றது.

ஃ வேலூரில் வாழும் நக ரத்தார்களின் முயற்சியுடனும் ஈடுபாட்டுடனும் காந்தி நகரில் கற்பக விநாயகர் ஆலயமும் தத்வாச்சாரியில் வரசித்தி விநா யகர் ஆலயமும் நிர்மாணிக்கப் பெற்று அண்மையில் குடநீராட்டு விழாச் சிறப்பாக நடைபெற்றது

ஃ விருத்தாசலம் நகரத்தார் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 15-7-92 முதல் 19-7-92 வரை தெய்வீக இன்பச் சுற்றுலாவாக மருதமலே, திருச்செந்தூர், பழனி, குருவாயூர் போன்ற பல புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்தனர்.

ஃ வாசுகி சேவா நிலேயத் தின் துணைத் தலேவராக டாக்டர் திரு. என். என். கண்ணப்பன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஃ சிவகாசி அருள்மிகு விசு வநாத சுவாமி விசாலாட்சி அம்மன் ஆடித் தபசுத் திருவிழா வின் முதல் நாள் மண்டகப்படி 1-8-92 அன்று சிவகாசி நகரத் தார் வணிகர் சங்கத்தின் சார்பில் சிறப்பாக நடத்தப் பெற்றது.

ஃ சிங்கப்பூர் அருள்மிகு ருத்ர காளியம்மன் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 2-9-92 அன்று நடைபெற விருப் பதாக அக்கோவிலின் அறக்காவ லர் குழுத் தலேவரும் சிங்கப்பூர் நேஷனல் பல்கலேக் கழகத்தின் பேராசிரியருமான முனேவர் திரு. ஆர். கருணாநிதி அறிவித் துள்ளார்.

ஃ காளேயார் கோவில் வேதாந்த மடாலயத்தில் தவத் திரு செல்லப்ப ஞான தேசிக சுவாமிகளின் 70 ஆவது குரு பூஜை 22-7-92 அன்று நடை பெற்றது.

மைசூர் கர்ஞடகா தசரா ஸ்பெஷல்

30—9—92 முதல் 6—10—92 வரை 7 நாட்கள்

மதுரை - பெங்களூர் - சரவணபெலகுலா – பேளூர் – ஹாலபீடு - சிருங்கேரி - மூகாம்பிகை - உடுப்பி - தர்மஸ்தலம் - சுப்ரமண்யா- தலைக்காவேரி - மைசூர் – மதுரை.

தலைக்காவேரி - ஐப்பசி துலா ஸ்நானம் = கர்ஞடகா ஸ்பெஷல்

13—10—92 முதல் 19—10—92 வரை 7 நாட்கள்

மேற்கண்ட முதல் பிரயாண விவரப்படி எல்லா இடங்களும்

நாள் ஏழுக்கு பஸ் கட்டணம், காலை ஆகாரம், மதிய உணவு மாலை ஸ்வீட், காரம், காபி, இரவு ஆகாரம் தங்கும் வசதி கர்ஞடக வரி உட்பட நபர் 1க்கு ரூ. 795 - அட்வான்ஸ் ரூ. 250 - செலுத்தி முன் பதிவு செய்ய வேண்டுகிருேம்.

தீபாவளி கங்கா ஸ்நானம காசி யாததிரை

2—10—92 முதல் 10 நாட்கள்

காசி - சாரநாத் - கயா - புத்தகயா-அலகாபாத் (திரிவேணி) III டயர் (தூங்கும் வசதி) இரயில் கட்டணம், சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு உள்பட நபர் 1க்கு ரூ. 1750/-

---

தீபாவளி கங்கா ஸ்நான வடஇந்திய காசி யாத்திரை

21—10—92 முதல் 16 நாட்கள்

காசி - சாரநாத் – கயா - புத்தகயா - அலகாபாத் (திரிவேணி) ஹரித்துவார் - ரிஷிகேஷ் - டெல்லி – ஆக்ரா - மதுரா - பிருந்தா வனம். III டயர் (தூங்கும் வசதி) இரயில் கட்டணம், சாப்பாடு ஊர் சுற்றிப் பார்க்கும் செலவு உள்பட நபர் 1க்கு ரூ. 2, 350/– ரூ. 750 - செலுத்தி டிக்கட் பதிவுசெய்து கொள்ளவேண்டுகிருேம்.

L. T. C, L. F. C., *சான்றிதழ் வழங்கப்படும்.*

SUBAM TRAVEL AGENCY

சுபம்

டிராவல்ஸ் ஏஜென்ஸி!

226, நாயக்கர் புதுத் தெரு, மதுரை-1. ☏ 22712

இரு தங்கப் பதக்கங்கள் பெற்ற மாணவர்!

இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னுலஜியில் (I.I.T.) அகில இந்திய அளவில் தேர்வு எழுதித் தகுதி அடிப்படையில் மட்டுமே சேர முடியும். அவ்வாறு சென்னை I. I. T. யில் 1988 முதல் 1992 வரை நான்கு ஆண்டுகளில் பல்வேறு பொறியியல் துறைகளில் சேர்ந்து பயின்ற 250 மாணவமணிகளில் படத்தில் காணும் திரு. எம். கண்ணன் B. Tech. படித்து படிப்பில் முதல் மாணவனுகத் தேர்ச்சி பெற்று (Best Academic Record) குடியரசுத் தலைவரின் தங்கப் பதக்கம் பெற்ருர்.



சென்னையில் 31-7-92 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் - கம்ப்யூட்டர் பொறியியலில் முதலிடம் பெற்றதற்காகவும் எல்லாத் துறை மாணவர்களிலும் முதல் மாணவராகத் தேர்வு பெற்றதற்காகவும்– குடியரசுத் தலைவரின் இரு தங்கப் பதக்கங்களையும் இந்திய அரசின் விஞ்ஞானத் துறைச் செயலாளர் டாக்டர் பி. இராமாராவிடமிருந்து திரு. எம். கண்ணன் பெற்ருர். வியத்தகு சாதனை நிகழ்த்திய திரு. கண்ணனுக்கு நமது பாராட்டுக்கள்.

திரு. கண்ணன் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் முழு உதவித் தொகை பெற்று கம்ப்யூட்டர் அறிவியலில் M. S. படிக்கவும் Ph. D. பயிலவும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்காக இவர் 15-8-92 அன்று சென்னையிலிருந்து அமெரிக்கா புறப்பட்டுச் சென்றிருக்கிருர்.

திரு. கண்ணன் தேவகோட்டையைச் சேர்ந்த தியாகி திரு. இராம. தினமணிச் செட்டியாரின் மகள் வழிப் பேரன் ஆவார். திரு. கண்ணனுடைய தந்தை Wing Commander திரு. எஸ். முத்துக் கருப்பன் (தேவகோட்டை திரு. சோமசுந்தரம் செட்டியார் - வள்ளியம்மை ஆச்சியின் புதல்வர்) பென்னலூரில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பொறியியற் கல்லூரியில் உதவி முதல்வராகவும் Computer Engineering & Science துறையின் தலைவராகவும் பணியாற்றி வருகிருர்.

திரு. எம். கண்ணனது சாதனை நம் சமூக இளைஞர்களுக்குத் தூண்டுகோலாகவும் தன்னம்பிக்கையை வளர்க்கவும் பெரிதுந் துணைபுரியும். திரு. கண்ணனுக்கு நமது மகிழ்ச்சியையும் நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வோம்.

அங்காள பரமேஸ்வரி திருக்கோவில் திருக்குட நன்னீராட்டு விழா

நாகை காயிதேமில்லத் மாவட்டம் கீழப்பெரும்பள்ளம் அருள்மிகு அன்னை அங்காள பரமேஸ்வரி திருக்கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா 9-9-92 அன்று காலை 6-15 மணிக்கு மேல் 8-10 மணிக்குள் நிகழவிருக்கிறது.

அதனையொட்டி 7-9-92 அன்று இரவு 10 மணிக்கு திரு. சாலமன் பாப்பையா நடுவராக இருக்க சுழலும் சொல்லரங்கமும் 8-9-92 காலை 11 மணிக்கு 'காசிஸ்ரீ' திரு. அரு. சோ. தலைமையில் 'ஓசைகள்' என்ற பொதுத் தலைப்பில் கவியரங்கமும் நிகழவிருக்கின்றன. 8-9-92 மாலை திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் நுழைவு வாயிலையும் திரு. இரா. சொக்கலிங்கம் நீர்த் தொட்டியையும் திறந்து வைக்க இருக்கின்றனர். அடுத்து திருமதி இளம்பிறை மணிமாறன் நடுவராக இருக்க பட்டி மண்டபமும் கவிஞர் திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப் பாட்டும் 9-9-92 இரவு 9 மணிக்கு 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்ற தலைப்பில் டாக்டர் திருமதி சரஸ்வதி இராமநாதனின் ஆன்மீகச் சொற்பொழிவும் நிகழவிருக்கின்றன.

விழாவிற்கான ஏற்பாடுகளை திரு. கே. பி. சண்முகசுந்தரம் பிள்ளையும் திரு. ஆர். கே. அரங்கநாதம் பிள்ளையும் மற்றும் விழாக் குழுவினரும் செய்து வருகின்றனர்.

கண்ணீர் அஞ்சலி



தோற்றம் : 1-6-1918

மறைவு : 16-8-1992

திருமதி அழ. அன்னபூரணி ஆச்சி

உ. சிறுவயல்

அன்னை இல்லம் வாழ்ந்த
அன்னபூரணித் தாய்க்கு அன்பின்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

RM. அழகப்ப செட்டியார் - கணவர்
மகன்கள், மகள்கள், பேரன், பேத்திகள்.

உங்கள் குரல்

ஆகஸ்ட் இதழ்தனிலே
அற்புதமாய்த் (த்) தாலாட்டு
பாகாகத் தேன்சிந்தும்
பற்பல செய்திகள்
செய்திகள் வாசிப்பவர்
சிறப்பான தொகுப்பு ..
நெய்யிலே மணக்கவந்து
நினைவிருக்கும் பணியாரம்
மொத்தத்தில் இனிப்பு !
முழுக்கவும் சிறப்பு !

நகைச்சுவைக் கவிஞர்
கரு. கருப்பையா
கண்டரமாணிக்கம்

தமிழ் மணம் பரப்பிவரும் திருநாவுக்கரசு அவர்களைப் பற்றிய கட்டுரை சிறப்பாகவும் மெய் சிலிர்க்கும் வகையிலும் இருந்தது. அவர்களது தமிழ்த் தொண்டு வளர்க! காலம் பற்றிய கட்டுரை சிறியதானாலும் பெரிய பெரிய கருத்துக்களைத் தந்திருந்தது. பாராட்டுக்கள்.

எஸ். நாராயணன்
நன்னிலம்

ஆகஸ்ட்' 92 இதழில் காலம் பற்றிய செய்தித் தொகுப்பு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

ஏஎன். சிதம்பரம்
விரையாச்சிலை

சுவாமி படங்களையே ''நகரத்தார் குரல்'' அட்டையில் பார்த்து வந்த எங்களுக்கு ஆகஸ்ட்' 92 இதழ் அட்டைப் படம் ஒரு மாறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்தது. இதுபோல் தொடர்ந்து நம்மவர்களில் பெருமைக்குரியவர்களின் படங்களை வெளியிட்டால் நல்லது.

எஸ். இராமநாதன்
மதுரை

(நம்மவர்களில் பெருமைக்குரிய - காலஞ்சென்றவர்களின் படங்களை அட்டைப் படமாக வெளியிடுவது என 9–7–92 அன்று நடைபெற்ற ''நகரத்தார் குரல்'' ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி தொடர்ந்து வெளியிட்டு வர இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். — ஆசிரியர்)

ஓரிரு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு ''நகரத்தார் குரல்'' இதழ்களில் மீண்டும் தாலாட்டு வெளிவருவது பெருமகிழ்வைத் தருகிறது. தொடர்ந்து தாலாட்டுப் பாடல்களை வெளியிட்டு ஆச்சிமார்களைப் பெருமைப்படுத்த வேண்டுகிறேன்.

ஆர்எம். வள்ளியம்மை
சென்னை

சேலத்தில் திருவிளக்கு வழிபாடு

சேலம் வாழ் நகரத்தார் பெண்கள் 108 பேர் பங்கு கொண்ட திருவிளக்கு வழிபாடு 14-8-92 அன்று சேலம் பிரம்ம ஞான சபைக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. 1985 தொடங்கி ஆண்டு தோறும் நடைபெற்றுவரும் இதில் நகரத்தார்களும் ஆச்சிமார்களும் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். திருவிளக்கு வழிபாடு ஏற்பாடுகளை கொத்தமங்கலம் திரு. லெ. திருநாவுக்கரசு செட்டியாரும் ஆடிட்டர் ஒக்கூர் திரு. சித. அண்ணாமலை செட்டியாரும் முன்னின்று கவனித்தனர்.

ஒன்பதாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் :
10-5-1928

மறைவு :
26-9-1983

பாகனேரி திருமதி மா. மீனாட்சி ஆச்சி

எங்கள் நெஞ்சிருக்கும்
வரை உன் நினைவிருக்கும்
வழிகாட்டும் ஒளிவிளக்காய் என்றும்
எங்களுடன் வாழ்ந்திருக்கும்
உங்களுக்கு எங்கள் இதய அஞ்சலி

சுப. வே. மாணிக்கம் செட்டியார்-கணவர்

மக்கள்:-

மா. தியாகராஜன் - மரகதம் தியாகராஜன்
மா. ராம. சுப்பிரமணியன் என்ற கார்த்திக் (பேரன்)
பிரேமா இராமகிருஷ்ணன்
வள்ளியப்மை - சேது இராமனுதன்
காமாட்சி - உ சம்பத்து
விஜயலெட்சுமி - M. S. முத்துராமன்
செல்லமீனுள் - SP. ரவி என்ற இராமனுதன்

மற்றும் பேரன் பேத்திகள்

மீனுட்சி அன் கோ., பைனுன்சியர்ஸ்
44-A, தெற்கு மாசி வீதி, மதுரை-625 001
ஸ்ரீமீனுட்சி இல்லம், 4/222, 223, சதாசிவநகர், மதுரை.

ஸ்ரீ லெட்சுமி கார்ப்பொரேஷன்,
இரும்பு மொத்த வியாபாரம்,
56-57, சப்ஜெயில் ரோடு, திருச்சி-620 008
தொலைபேசி எண்: 27924 & 33740
மீனுட்சி இல்லம், ராமலிங்க நகர், திருச்சி-620 003

பாகனேரி சேந்தூரணி செல்வ விநாயகர் கோவில் குடநீராட்டு விழா

பாகனேரி பழைய வளவில் அமைந்துள்ள சேந்தூரணி அருள் மிகு செல்வ விநாயகர் கோவிலின் திருக்குட நன்னீராட்டு விழா நாளது ஆவணி மீ 26உ (11-9-92) வெள்ளிக் கிழமை காலை 8-25 மணிக்குமேல் 9-50 மணிக்குள் நடைபெற உள்ளது.

9-9-92 புதன் மாலை யாக சாலைப்பூஜை தொடங்கி 11-9-92 வெள்ளி காலை வரை நடைபெற உள்ளது.

பட்டி மண்டபம்

குடநீராட்டை யொட்டி 10-9-92 வியாழன் மாலை 4-30 மணி அளவில் பட்டி மண்டபம் நடைபெற உள்ளது. அதற்கு திரு. வே. வேலாயுதம் செட்டியார் தலைமையேற்க திரு. சுப. வே. தியாகராஜன் வரவேற்புரை நிகழ்த்த திரு. எம். ஆர். சேது ராமன் வாழ்த்துரை வழங்க விருக்கிறார்.

காவல்துறை உதவி ஆணையாளர் டாக்டர் வாசு கணபதி அவர்கள் நடுவர் பொறுப்பேற்க 'வாழ்க்கையின் உயர்வுக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பவர் கணவனே.... மனைவியே ...' என்ற தலைப்பில் நடைபெற உள்ள பட்டி மண்டபத்தில் 'கணவனே' என்ற அணியில் திருவாளர்கள் பொன். ரவீந்திரன், அரியநாயகம், ராஜா ஆகியோரும் 'மனைவியே' என்ற அணியில் திருமதி மாதவி, செல்வி கலாமணி, செல்வி அமலராணி ஆகியோரும் வாதிடவிருக்கிறார்கள்.

இன்னிசை

10-9-92 வியாழன் இரவு 9 மணி அளவில் மதுரை கீதாலயா இசைக் குழுவினரின் திரைப்பட இன்னிசை நிகழ்ச்சியும் 11-9-92 வெள்ளி இரவு 10 மணிக்கு வள்ளி திருமணம் நாடகமும் நடைபெற உள்ளன.

இத்தகவல்களை திருப்பணி மற்றும் குடநீராட்டு விழாவை தமது சொந்தச் செலவில் செய்து வரும் பாகனேரி திரு. சுப. வே. மாணிக்கம் செட்டியார் தெரிவித்தார்.

இயற்கை எய்தினர்

திரைப்பட விநியோகம், திரையரங்க நிர்வாகம் போன்றவற்றில் நீண்டகாலம் அனுபவம் பெற்றவரும் மதுரையில் 'கொப்புடையவள் மூவீஸ்' என்கிற திரைப்பட விநியோக நிறுவனத்தை நடத்தி வந்தவரும் காரைக்குடியைச் சேர்ந்தவருமான திரு. வெ. ராம. லெ. ராம. கி. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் 7-8-92 அன்று காரைக்குடியில் இயற்கை எய்தினர்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1949ல் படவெளியீட்டு நிறுவனம் ஒன்றில் பிரதிநிதியாக தம் திரை வாழ்க்கையைத் தொடங்கிய அவர்கள் பட விநியோகத் துறையில் பலருக்கு வழிகாட்டியாகவும், படத் தயாரிப்பு, பட விநியோகம் பற்றிப் புள்ளி விவரங்களுடன் கூறும் கம்ப்யூட்டராகவும் திகழ்ந்தார்கள்.

இவர்கள் படத் தயாரிப்பாளர் திரு ஏவி. எம்., நடிகர்கள் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பாலாஜி, நடிகைகள் சாவித்திரி. பத்மினி, சௌகார் ஜானகி படத் தயாரிப்பாளராக, இயக்குநராக இருந்த ஏ. பி. நாகராஜன் போன்றவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள்.

திருச்சி சங்கத்தின் ஆண்டு விழா


திருச்சி நகரத்தார் சங்கத்தின் 43 ஆவது ஆண்டு விழா திருச்சி அண்ணாமலை நகரில் 25-7-92 அன்று மாலை நடைபெற்றது.

திருமதி மீனாட்சி அண்ணாமலை இறைவணக்கம் பாட, சங்கத் துணைத் தலைவர் திரு. மெ. அடைக்கலவன் வரவேற்றுப் பேசினார். செயலாளர் திரு. சா. சண்முகம் ஆண்டறிக்கை வாசித்தார். விழாவிற்கு திரு. எஸ். ஒ. ஆர் எம். கணபதிச் செட்டியார் தலைமையேற்று உரையாற்றினார்.

பின்னர் சிறப்பு விருந்தினர் ''கல்கண்டு'' இதழின் ஆசிரியர் திரு. லேனா தமிழ்வாணன் 'ஏற்றம் பெற மாற்றம் தேவை' என்கிற தலைப்பில் உரையாற்றினார்.

சிறுவர் – சிறுமிகளின் மாறுவேடப் போட்டி நடைபெற்றது. அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு திரு. லேனா பரிசுகளை வழங்கினார்.

பின்னர் புலவர் மாமணி திரு. மா. முத்துராமனை நடுவராகக் கொண்டு வழக்காடு மன்றம் நடைபெற்றது. 'இல்லறச் சிறப்பிற்குக் காரணம் ஆடவரே என்பது குற்றம்' என்று



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

ராம. ரெங்கனாதன் செட்டியார்

மறைவு : 9-8-1991

கோயமுத்தூர் சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிமிடெட்
பொது மேலாளராகப் பணியாற்றிய கருங்குளம
ராமை. ரெங்கனாதன் செட்டியார் அவர்களின்
முதலாம் ஆண்டு நினைவு நாளில் அவர்களது அன்பு
மறவாமல் அஞ்சலி செலுத்துகிறோம்.

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்.
நிர்வாகத்தினர் மற்றும் அலுவலர்கள்

திருமதி புனிதா ஏகாம்பரம் வழக்குத் தொடுக்க முனைவர் திரு. சபா. அருணசலம் அதனை மறுத்தார் 'இல்லறச் சிறப்பிற்குக் காரணம் ஆடவராக இருந்தாலும் அதற்குப் பெருமை சேர்ப்பது பெண்களே' என நடுவர் திரு மா. முத்துராமன் தீர்ப்பு வழங்கினர்.

செயலாளர் திரு. என். அருண் நன்றி கூறினர். விழா நிகழ்ச்சிகளை திரு. என். அருண். திருமதி கலைமணி அருண் தொகுத்து வழங்கினர்.

25-7-92 அன்று விழாவிற்கு முன்னதாக சங்கத்தலைவர் திரு எஸ். ஓ. ஆர் எம். கணபதிச் செட்டியார் தலைமையில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. பொருளாளர் திரு. கே. இ. மெய்யப்பன் தணிக்கை செய்யப் பெற்ற வரவு செலவுக் கணக்குகளைச் சமர்ப்பித்தார்.

அகநானூறும் புறநானூறும்!

''உங்களுக்குத் தெரிந்த அகநானூறு புறநானூறு எனக்கும் தெரியும். அதுமட்டுமல்ல அதனை நான் நடைமுறையில் நடத்திக் கொண்டும் இருக்கிறேன்'' என்று இளைஞன் ஒருவன் ஆர்வமாய் என்னைப் பார்த்துச் சொன்னன்.

''அகநானூறு புறநானூறு பற்றி உனக்குத் தெரியுமா? மிக்க மகிழ்ச்சி. ஒவ்வொரு இளைஞரும் உன்னைப்போல் தமிழ் ஆர்வலராக இருக்கவேண்டுமென்பதே எங்களைப் போன்றோரின் விருப்பம்'' என்று மகிழ்ந்த நான் அவனைப் பார்த்து —

''அதெப்படி நடத்திக் கொண்டிருக்கிருய்?'' என்று கேட்டேன்.

அதற்கு அவன் ''எனக்கு மாதம் 800 ரூபாய் சம்பளம். அகம் நானூறும் புறம் நானூறும் நடந்து கொண்டிருக்கிறது'' என்ருன்.

''அது எப்படி?'' என்று விளக்கம் கேட்டேன்.

''அகம் – வீட்டுச் செலவு நானூறு; புறம் – வெளிச் செலவு நானூறு என்ருன்.

— புலவர். மாமணி மா. முத்துராமன்
(திருமண வாழ்த்தரங்கம் ஒன்றில்)

விசுவாசமுள்ள நாய்!

என் நண்பர் ஒருவரிடம் அழகான நாய் ஒன்று இருந்தது. அதை விலைக்குத் தருமாறு அவரிடம் கேட்டேன். அவர் அதற்கு ரூபாய் ஐயாயிரம் கேட்டார். ''ஒரு நாயின் விலை ஐயாயிரம் ரூபாயா?'' என்றேன். அவரோ ''அது விசுவாசமுள்ள நாய்'' என்ருர். ''அது எப்படி?'' என்று கேட்டபோது, ''இதுவரைக்கும் நான் இருபது பேரிடம் விற்ற பிறகும் அது திரும்பத் திரும்ப என்னிடமே வந்து கொண்டிருக்கிறது'' என்ருரே பார்க்கலாம்.

— கவிஞர் கரு. கருப்பையா
(பாகனேரியில் நடை பெற்ற வழக்காடு மன்றம் ஒன்றில்)

மணி விழாவில் வரவும் செலவும்!

அப்பா அம்மாவிற்கு அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா வருகிறது என்றால் பெண் மக்கள் "விடாது நடத்துங்கள்; நடத்துங்கள்" என்று தூண்டிக்கொண்டேயிருப்பார்கள். ஆனால் ஆண் மக்களோ 'அறுபதாம் ஆண்டா? அது செய்து கொள்ளத்தான் வேண்டுமா?' என்று யோசித்துக்கொண்டேயிருப்பார்கள். காரணம் அதனால் பெண் மக்களுக்கு வரவு; ஆண் மக்களுக்குச் செலவு!

அறுபதாம் ஆண்டு மணி விழாக் காணும் வசதி படைத்த பெருமக்கள் தங்கள் மணி விழாவில் நம்மினத்து ஏழைப் பெண் ஒருவருக்குத் திருமணத்தை நடத்தி வைக்க முன் வரவேண்டும்.

— லேனா தமிழ்வாணன்

(திருச்சி நகரத்தார் சங்கத்தின் சார்பாக 25-7-92 அன்று நடைபெற்ற 43-ஆவது ஆண்டு விழாச் சிறப்புரையில்)

'நான்' என்று சொல்வதினும் 'நாம்' என்று சொல்வதிலேயே நலம் பயக்கும் என்பதால் இறைவன் சிறுத் தொண்டர் வரலாற்றில் பெண்கள் இருக்கும் இடத்தில் 'நாம் இருப்பதில்லை' என்று சொன்னார்.

— காசிஸ்ரீ அரு. சோ.

(காவிரிப்பூம்பட்டினம் பட்டினத் தடிகளின் அற்புதத் திருவிழாவில்)



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு: 2-9-1990

எல். சண்முகம் செட்டியார்

கோயமுத்தூர் சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்., மேலாளராகப் பணியாற்றிய ஒ சிறுவயல் எல். சண்முகம் செட்டியார் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாளில் அவர்களது அன்பு மறவாமல் அஞ்சலி செலுத்துகிறோம்.

சௌத் இந்தியா கார்ப்பரேஷன் லிட்,
நிர்வாகத்தினர் மற்றும் அலுவலர்கள்

வேலூரில் கண்ணதாசன் விழா

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் சார்பாக வேலூரில் 25-7-92 & 26-7-92 ஆகிய இரு தினங்கள் கண்ணதாசன் விழா சிறப்பாக நடைபெற்றது.

25-7-92 அன்று அமைச்சர் மாண்புமிகு ஜி. விஸ்வநாதன் அவர்கள் தலைமையில் விவாத மேடை நடைபெற்றது.

26-7-92 அன்று விழாவில் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்ற மாநிலத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் செட்டியார், மாநிலச் செயலாளர் திரு. அரு. நாகப்பன் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. அரு. லெட்சுமணன் தொழிலதிபர் திரு. மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். விழாவில் கவியரங்கமும் பட்டிமன்றமும் நடைபெற்றன.

விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்ட மன்றத் தலைவர் திரு. சோலைநாதன் சிறப்புத் தலைவர் திரு. பிஆர். மெய்யப்ப செட்டியார் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

வேலூர் சங்கத்தில் வரவேற்பு

வேலூர் நகரத்தார் சங்கத்தின் சார்பில் நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமணன், தொழிலதிபர் திரு. மு. ப. மு. ராம. சேதுராமன் செட்டியார், திரு. வி. என். சிதம்பரம் செடடியார் ஆகியோருக்கு வேலூரில் 26-7-92 அன்று வரவேற்பும் தேநீர் விருந்தும் நடைபெற்றது.


சங்கத் தலைவர் திரு. பிஆர். மெய்யப்ப செட்டியார் வரவேற்றுப் பேசினார். சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றினார்கள்.

நம்மவர்கள் அதிக அளவில் தொழில்களைத் தொடங்கி நம்மவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க வேண்டுமென நீதிபதி திரு. ஏஆர். லெட்சுமணனும் வெளிநாடுகளில் இருக்கும் நமக்குச் சொந்தமான சொத்துக்களை விற்று பணத்தை நம் நாட்டுக்குக் கொண்டுவந்து நம்மவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்க நகரத்தார் சங்கங்கள் முயற்சி எடுக்க வேண்டுமென திரு. வி. என். சிடி. யும் கேட்டுக்கொண்டார்கள்.

கொப்பனாபட்டியில் தாம் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றைத் தொடங்கவிருப்பதாகவும் வேலூர் சங்கத்தின் கட்டிட நிதிக்கு நன்கொடை அளிப்பதாகவும் திரு. சேதுராமன் செட்டியார் கூறினார். இக் கூட்டத்தில் திரு. அரு. நாகப்பனும் உரையாற்றினார். திரு. வி. சுந்தரம் நன்றி கூறினார்.

ஃ ஃ ஃ

எக்ஸ்போ பிரிண்டர்ஸ், 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு, மதுரை-625 009ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் அதே முகவரியிலிருந்து வெளிடப் பெறுகிறது. ஆசிரியர்: வி.என். சிதம்பரம்



'தமிழ்க் கடல்' இராய. சொக்கலிங்கனார் அவர்கள் காந்தியடிகளுக்குப் பிள்ளைத் தமிழ் பாடியவர்கள். காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்திற்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வருகை தந்தபோது இளைஞராயிருந்து வரவேற்றவர்கள்.


''கொள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால்–நூல்
கொடுக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை
அள்ளும் தமிழ்க்கடல் கண்டதல்லால்–நூல்
அளிக்கும் தமிழ்க்கடல் கண்டதில்லை''

என்று போற்றப் பெற்றவர்கள். தான் வைத்திருந்த நூலகத்தை அழகப்பா கல்லூரிக்கு வழங்கியவர்கள்.

கம்பனும் சிவனும் வில்லியும் சிவனும் ஆகிய நூல்களைத் தந்த தமிழ்க் கடலார் பார்வைக்குப் பல மன்னர்கள் காத்திருந்தார்கள். செந்தமிழ் வளர்த்த சேதுபதிகளில் குறிப்பிடத்தக்க இராமனாத சேதுபதி அவர்கள் தமிழ்க்கடலைப் போற்றிப் பேணிய பெருமை பெற்றவர். சிவகங்கை மன்னர் கார்த்திகேய வெங்கடாசலபதி அவர்கள் தமிழ்க் கடலின் தமிழ்ப் பேச்சில் மனம் வைத்தவர். இந்த மன்னர் இருவருக்குமிடையில் இராய. சொ. அவர்கள் நிற்கும் இப்படம் பாவேந்தரும் கோவேந்தரும் இணைந்து நிற்கும் தமிழ்ப் பண்பாட்டைக் காட்டுகிறது. அரசியலிலும் இலக்கியத்திலும் நகரத்தார்களுக்குப் பெருமை தேடித் தந்தவர் 'தமிழ்க் கடல்' இராய. சொ. அவர்கள்

— சொ. சொ. மீ. சுந்தரம் M. Com.

கண்ணதாசன் நினைவு இதழ் & தீபாவளிச் சிறப்பிதழ் !



''நகரத்தார் குரல்'' அக்டோபர் 1992 இதழ் கவியரசு கண்ணதாசன் நினைவு இதழாகவும் தீபாவளிச் சிறப்பிதழாகவும் அதிகப் பக்கங்களையும் சிறந்த கவிதை, கட்டுரைகளையும் கொண்டு கண்களையும் கருத்தையும் கவரும் வகையில் 12-10-92 அன்று வெளிவரும்.

எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களையும் விளம்பரதாரர்கள் தங்கள் விளம்பரங்களையும் 20-9-92க்குள் அனுப்பி உதவ வேண்டுகிறோம்

— ஆசிரியர்

நகரத்தார் குரல்

வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

''நகரத்தார் குரல்'' உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்ய முயற்சித்து வருகிறோம்

ஏற்கனவே ''நகரத்தார் குரல்'' உறுப்பினர்களாக இருப்பவர்கள் தங்களுடைய உறவினர்கள், நண்பர்களுக்கு நம் இதழை வாங்கிப் படிக்க பரிந்துரை செய்ய அல்லது அவர்களிடம் சேவை மனப்பான்மையுடன் உறுப்பினர் கட்டணத்தைப் பெற்று நமக்கு அனுப்பி உதவ அன்புடன் வேண்டுகிறோம்.

— நிர்வாகி